நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## முத்தாண்டிக்குப்பம் கிராமத்தில் உழவர் பெருவிழா

பண்ருட்டி வட்டம், முத்தாண்டிக்குப்பம் கிராமத்தில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவில், விவசாயிகளுக்குத் தேவையான விவசாயம் தொடர்பான அனைத்து விவரங்கள், தொழில்நுட்பங்கள், நவீன வேளாண் முறைகளை உரிய வல்லுநர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி நடத்தப்படுகிறது. இதில் வேளாண்மை, பொறியியல், கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு உள்ளிட்ட 11 துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் விவசாயிகளுக்குத் தேவையான விவரங்களை வழங்கினர்.

விவசாயிகளுக்கு எளிதில் விளங்கும் வண்ணம் கண்காட்சிகள், தெருக்கூத்து, நாடகம், நடனம் மற்றும் செயல்விளக்கங்கள் மூலம் வேளாண் தொழில்நுட்பங்கள் விளக்கப்பட்டது.

விழாவுக்கு, தலைமை வகித்து, தொடங்கி வைத்த, நெய்வேலி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.பி.எஸ்.சிவசுப்ரமணியன், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் எருகுழி அமைக்க நான்கு பேருக்கு தலா ரூ.2,216 காசோலையையும், எண்ணெய்ப் பனை நடவு மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6 ஆயிரம் வீதம் தலா இருவருக்கும், ரூ.1.15 லட்சம் மதிப்புள்ள பவர் டில்லரை ஆதிதிராவிடர் விவசாயக் குழுவினருக்கும் வழங்கினார்.

பண்ருட்டி வேளாண்மை உதவி இயக்குநர் ஆ.சங்கர் முன்னிலை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் மாலதி கமலக்கண்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் கே.தேவநாதன், மாலாபெருமாள், பூங்கொடி ராதாகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர் ஜோதிபழனி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

துணை வேளாண்மை அலுவலர் சி.சண்முகசுந்தரம் வரவேற்றார். தோட்டக்கலைத் துறை ரவிசேகர் நன்றி கூறினார்.

## "விவசாயத்துக்கு நடப்பாண்டில் ரூ.5,189 கோடி ஒதுக்கீடு' கடலூர்,

விவசாயத்துக்கு நடப்பாண்டில் ரூ.5,189 கோடி நிதியை முதல்வர் ஒதுக்கீடு செய்துள்ளார் என சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் பேசினார்.

கடலூர் அருகே மேலழிஞ்சிப்பட்டு கிராமத்தில் உழவர் பெருவிழா தொடக்க நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் ராமதாஸ் வரவேற்றார்.

விழாவை தொடங்கி வைத்து அமைச்சர் எம்.சி.சம்பத் பேசுகையில், "இயற்கைச் சீற்றம் காரணமாக தமிழகத்தில் குறைந்து வரும் விவசாய விளை பொருள்களின் உற்பத்தியை இரு

மடங்காக உயர்த்தி, விவசாயிகளுக்கு மூன்று மடங்கு வருவாய் கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இரண்டாம் பசுமைப் புரட்சி திட்டத்துக்காக தமிழக அரசு வேளாண் சார்ந்த அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, விவசாயத்துக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களையும், அதைப் பயன்படுத்தி விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றிட விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கிராமம்தோறும் உழவர் பெருவிழா நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, கடலூர் மாவட்டத்தில் 840 வருவாய் கிராமங்களில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாய மேம்பாட்டுக்கு நடப்பாண்டில் ரூ.5,189 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 19 சதவீதம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் உழவர் பெருவிழாவை நடத்த ரூ.42 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு கிராமத்துக்கு ரூ.36,550 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மாவட்டத்தில் ரூ.1.50 கோடி மதிப்பில் வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற அரசு உதவிகளை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் விவசாயத்தை உலகத் தரத்துக்குக் கொண்டு வர முதல்வர் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார். முதல்வரின் முயற்சிக்கு அனைத்து விவசாயிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

பல்வேறு துறை சார்பில் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார். விழாவில் பங்கேற்ற விவசாயிகளுக்கு அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது.

வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அசோகன், முன்னாள் எம்.எல்.ஏ. கோ.அய்யப்பன், நகரச் செயலர் குமரன், ஒன்றியச் செயலர்கள் பழனிச்சாமி, முத்துக்குமாரசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இன்று முதல் உழவர் பெருவிழா**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் ஒரு மாத காலத்துக்கு உழவர் பெருவிழா நடைபெறும் என்று தமிழக அரசின் கூடுதல் செயலாளர் முருகையா தெரிவித்தார்.

உழவர் பெருவிழா நடத்துவது குறித்த கண்காணப்புக் குழு ஆலோசனைக் கூட்டம் காஞ்சிபுரத்தில் சனிக்கிழமை நடந்தது. இக்கூட்டத்தில் உழவர் பெருவிழாவின்போது, விவசாய பெருமக்களிடம் என்னென்ன விவரங்கள் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தமிழக அரசின் கூடுதல் செயாளர் முருகையா பேசியது: உழவர் பெருவிழாவின் மூலம் 2-வது பசுமை புரட்சியை அடைந்திட வேளாண்மை சார்ந்த அரசின் திட்டங்கள் விசாயிகளை சென்றடைய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அதிகாரிகள் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும்.

மகசூலை பெருக்கும் வகையில், குறைந்தபட்சமாக 20 சதவீத விவசாய நிலங்களில் மண் மாதிரி சேகரித்தல் உள்ளிட்ட பணிகளில் அதிகாரிகள் ஈடுபட வேண்டும். மேலும் உழவர் ஒருங்கிணைந்த கையேடுகளை வழங்க வேண்டும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1137 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை (ஏப். 14) இப்பெருவிழா தொடங்கும் என்றார் முருகையா.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன், மாவட்ட திட்ட அலுவலர் அருள்ஜோதிஅரசன், வேளாண்மை இணை இயக்குநர் செப்ந்தரராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**பசுமைப் புரட்சியை உருவாக்கவே உழவர் பெருவிழா: அமைச்சர்**

பசுமைப் புரட்சியை உருவாக்கவே, தமிழகத்தில் உழவர் பெருவிழா நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளதாக சங்கராபுரத்தில் நடைபெற்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவில் அமைச்சர் ப.மோகன் தெரிவித்தார்.

சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார். விழாவில் ஊரகத் தொழில்துறை அமைச்சர் ப.மோகன் கலந்துகொண்டு பேசியதாவது:

தமிழக முதல்வர் ஜெயலலிதா சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடும் விதமாக வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழாவை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1490 வருவாய் கிராமங்களில் ஏப்.14-ம் தேதி முதல் மே 20-ம் தேதி வரை 30 நாள்கள் உழவர் பெருவிழா கொண்டாடப்பட உள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2 வருவாய் கிராமங்களைத் தேர்வு செய்து உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது. தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திட வேண்டும் என்ற நோக்கிலும், விவசாய பெருங்குடி மக்களை வேளாண்மைத் துறையில் ஊக்குவிக்கவும், வேளாண் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் பயிற்சியும் இந்த உழவர் பெருவிழாவின்போது விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதேபோல் வெண்மை புரட்சியை ஏற்படுத்துவதற்காக விலையில்லா கறவை பசு மற்றும் ஆடுகள் ஏழை எளிய மக்களுக்கு முதல்வர் ஜெயலலிதா வழங்கி வருகிறார்.

பேரறிஞர் அண்ணா விவசாயி நல முன்னேற்ற சங்க ஆண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1 லட்சம் மதிப்புள்ள பவர் டில்லர் வழங்கப்படுகிறது. வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் 2013-14-ம் ஆண்டுக்கான நிதி ரூ.5 கோடியாக இருந்ததை ரூ.8 கோடியாக உயர்த்தி முதல்வர் ஜெயலலிதா வழங்கி உள்ளார்.

மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பட்டு வளர்ச்சித்துறையில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

உழவர் பெருவிழாவின்போது விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அதிக அளவில் கலந்துகொண்டு, விவசாய நவீன தொழில்நுட்பங்களையும், பயிற்சியையும் பெற்று இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுத்திட ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார். பின்னர் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவருக்கும் அமைச்சர் ப.மோகன் அறுசுவை உணவு வழங்கினார்.

விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் க.முத்துமீனாள், ஒன்றியக்குழுத் தலைவர்கள் எஸ்.எஸ்.அரசு, ஏ.எஸ்.ஏ.ராஜசேகர், வேளாண் இணை இயக்குநர் டாக்டர் கே.அழகரசன்,பேரூராட்சித் தலைவர் எஸ்.ஏ.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சிறுவங்கூரில்...

கள்ளக்குறிச்சி, ஏப்.14: கள்ளக்குறிச்சி ஒன்றியம் சிறுவங்கூர் ஊராட்சியில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, உழவர் பெருவிழா ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் கே.தர்மலிங்கம் தலைமை வகித்தார். ஒன்றியக்குழுத் தலைவர் அ.இராஜசேகர் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் ந.பொன்னுராஜன் வரவேற்றார். எம்.எல்.ஏ க.அழகுவேலு பாபு பங்கேற்று உழவர் பெருவிழாவை தொடஹ்கி வைத்தார்.

ஊராட்சித் தலைவர் இ.செல்வராஜ், ஒன்றிய கவுன்சிலர் எஸ்.வி.தமிழரசன், வேளாண்மை பொறியியல்துறை, தோட்டக்கலைத்துறை கே.இளங்கோவன், வேளாண்மை உதவி அலுவலர் பொ.தேவி, கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இரா.முருகன், உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

விவசாயிகள் தெரிந்து கொள்வதற்காக சொட்டுநீர் பாசனம், திருந்திய நெல் சாகுபடி, செம்மை கரும்பு சாகுபடி, பாமாயில் பயிர், பசுமை திட்டத்தின் மூலம் வைத்திருந்த இளநீர், இயற்கை சார்ந்த வேளாண்மை மூலம் செயல் விளக்க மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன. 10 விவசாயிகளுக்கு பருத்தி நுண்ணூட்ட உரங்களை எம்.எல்.ஏ. வழங்கினார்.

பல்வேறு துறையினர் அவர்களின் செயல்திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினர். விழாவிற்கு வந்திருந்த விவசாயிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. சென்னை அண்ணா கலைக் குழுவினர் விவசாய பயிர்கள் சாகுபடி குறித்து நாடகம் நடத்தினர்.

**பசுமைப் புரட்சிக் கனவு சாத்தியமாகும்**

தமிழகத்தில் விவசாயத்துக்கென உருவாகக்கப்பட்டுள்ள சிறப்பான திட்டங்களால் இரண்டாம் பசுமைப் புரட்சி என்ற கனவு விரைவில் சாத்தியமாகும் என வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் சண்முகையா தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த கண்ணம்பாக்கம் ஊராட்சியில் தமிழ் புத்தாண்டையொட்டி உழவர் திருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் சதீஷ்குமார் தலைமை வகித்தார்.

ஒன்றியக் கவுன்சிலர் முத்துசாமி முன்னிலை

வகித்தார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் சண்முகையா பேசியது:

தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

மேலும் அதற்கேற்ப நவீன விவசாய முறைகளைப் பின்பற்றும் வகையில் உணவு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதனால் விரைவிலேயே இரண்டாம் பசுமைப் புரட்சிக் கனவு சாத்தியமாகும்.

விவசாயத்தை லாபகரமானதாக மாற்றக்கூடிய பயிற்சிகளை விவசாயிகளுக்கு வழங்க வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை உட்பட பல்வேறு துறைகள் தயாராக உள்ளன என்றார் அவர்.

துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன், கால்நடை மருத்துவர் சரவணன், வேளாண் விற்பனை மற்றும் வணிகப் பிரிவு அலுவலர் அருள்முருகன், வேளாண்மைப் பொறியாளர் துரைசாமி, தோட்டக்கலை உதவி இயக்குனர் தினகரன் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

வேளாண் உதவி மைய மேலாளர் திருநாவுக்கரசு நன்றி

கூறினார்.

**தொடங்கியது மாம்பழ சீசன்: கிலோ ரூ.50 முதல் ரூ.120 வரை விற்பனை**

திருவள்ளூரில் கடந்த சில தினங்களாக மாம்பழங்களின் விற்பனை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஒரு கிலோ மாம்பழம் ரூ.50-ல் இருந்து அதன் ரகத்திற்கேற்ப கிலோ ரூ.120 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கோடைக் காலம் என்றாலே அனைவரது நினைவுக்கும் வருவது மாம்பழம். முக்கனிகளில் முதலாவதாக போற்றப்படும் மாம்பழங்களுக்கு மக்களிடையே எப்போதும் சிறப்பான வரவேற்பு உண்டு.

தமிழகத்தில் தற்போது மாம்பழ சீசன் தொடங்கியுள்ளதையொட்டி பல்வேறு பகுதிகளில் மாம்பழங்களின் விற்பனை அமோகமாக நடைபெறுகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டத்திலும் பல வகையான மாம்பழங்கள் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளன.

இப்போது முதல்கட்டமாக மாவட்டத்துக்கு 5-க்கும் மேற்பட்ட மாம்பழ ரகங்கள் வந்துள்ளன. பங்கனப்பள்ளி, அல்போன்சா, இமாயத், ஜவ்வாரி உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் வந்துள்ளன.

இன்னும் சில வாரங்களில் மாம்பழங்களின் வரத்து கணிசமாக அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது.

அவ்வாறு அதிகரிக்கும் பட்சத்தில் மாம்பழங்களின் விலையும் குறையும்.

தமிழகத்தில் மாம்பழங்களின் விளைச்சல் தற்போது குறைவாக இருப்பதால் அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மாம்பழங்கள் அங்கேயே விற்பனை செய்யப்பட்டு விடுகின்றன.

எனவே இம்முறை ஆந்திர மாநிலம் விஜயவாடா, குண்டூர் போன்ற பகுதிகளில் இருந்து அதிகளவில் மாம்பழங்கள் இறக்குமதி செய்யப்படும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

திருவள்ளூரில் மாம்பழங்களின் விலை (ஒரு கிலோ): பங்கனப்பள்ளி - ரூ.70 முதல் ரூ.80 வரை, செந்தூரா - ரூ.50- 60, இமாயத் - ரூ.100- 120, அல்போன்சா - ரூ.100- 120, பீத்தர் - ரூ.60- 70, ஜவ்வாரி - ரூ.80- 90.

**உழவர் பெருவிழா: அமைச்சர் தொடங்கி வைத்தார்**

தமிழ்ப் புத்தாண்டையொட்டி, சோழவரம் ஒன்றியம், ஒரக்காடு கிராமத்தில் உழவர் பெருவிழா திட்டத்தை பால்வளத் துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

பொன்னேரி வட்டம், சோழவரம் ஒன்றியத்தில் உள்ள ஒரக்காடு கிராமத்தில் உழவர் பெருவிழா திட்ட தொடக்க விழா நடைபெற்றது.

விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் வீரராகராவ் தலைமை வகித்தார். ஒரக்காடு ஊராட்சி மன்றத் தலைவர் வசந்தி பாஸ்கரன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உழவர் பெருவிழாவை பால்வளத் துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி தொடங்கி வைத்தார்.

விழாவில் பேசிய மாவட்ட ஆட்சியர் வீரராகவராவ், "இம்மாவட்டத்தில் தற்போது செம்மை நெல் சாகுபடி முறையில் அதிக அளவில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஏக்கருக்கு 6 முதல் 10 மூட்டைகள் வரை கூடுதல் நெல் விளைச்சல் ஏற்படும். இத்திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் 705 வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி மே மாதம் 20-ம் தேதி வரை நடைபெறும்' என தெரிவித்தார்.

விழாவில், பொன்னேரி வட்டாட்சியர் சாகீர்சலீம், திருவள்ளூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசலு, வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி, வேளாண்மை வருவாய் அலுவலர் சேகர், சோழவரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் மாரிமேஸ்திரி, பாடியநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் பார்த்தீபன், ஜெகநாதபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் சம்பத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விளாங்காடுபாக்கம் ஊராட்சியில்..**
புழல் வட்டார வேளாண்மைத் துறை சார்பில் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் உழவர் பெருவிழா ஞாயிற்றுகிழமை நடைபெற்றது.

விழாவுக்கு புழல் ஒன்றியக் குழுத் தலைவர் குமாரி அருணாச்சலம் தலைமை தாங்கினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் மா.கெப்தமன் வரவேற்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக பால்வளத்துறை அமைச்சர் வி.மூர்த்தி பங்கேற்று விவசாயிகளுக்கு இடுபொருள்களை வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பி.சாந்தி, கால்நடை மருத்துவர் பி.லோகவாணி, தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் எல்.சுரேஷ், வேளாண்மை பொறியியல் துறை உதவிப் பொறியாளர் எம்.ஜெயகுமார் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

புழல் வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் ஜார்ஜ் நன்றி கூறினார்.

**அனைத்து ஒன்றியங்களிலும் உழவர் பெருவிழா துவக்கம்**
மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை துவங்கியது.

வாடிப்பட்டி ஒன்றியம் திருவேடகத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவை, கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜூ துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அவர் பேசியது:

வேளாண் உற்பத்தியை இரு மடங்காகவும், விவசாயிகளின் வருவாயை மும்மடங்காகவும் உயர்த்துவது என்ற அடிப்படையில், இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திடும் வகையில், உழவர் பெருவிழா கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. எந்தவொரு திட்டத்தை செயல்படுத்தினாலும் அந்தத் திட்டத்தின் எதிர்காலப் பயன்களை முழுமையாக ஆராய்ந்து, தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார்.

வேளாண் துறைக்கு ரூ. 17,220 கோடி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய விலையிலும், குறைந்த வாடகையிலும் வேளாண் இயந்திரங்கள் வழங்குதல் உள்ளிட்ட திட்டங்கள் இந்த நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், கூட்டுறவுத் துறையின் மூலமாக ரூ. 80 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய நலத்திட்ட உதவிகளும், வங்கிக் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. 2.85 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு விவசாய விளை பொருள்களை சேமித்து வைக்கும் வகையில் 2,270 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன என்றார் அமைச்சர்.

மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா:

பல்வேறு துறைகளின் வாயிலாக விவசாயிகளுக்காகச் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களை அறிந்து கொள்வதற்கும், இத் திட்டங்களின் மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது. கிராமத்துக்கு ஏற்ற பயிர் ரகங்கள் மற்றும்

அதற்கான தொழில்நுட்பங்கள், கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு முகாம்கள், தீவன வளர்ப்பு முறை, மீன் வளர்ப்பு முறைகள், பட்டுப்புழு வளர்ப்பு முறை, வேளாண் இயந்திரங்களின் முக்கியத்துவம், வங்கிகளின் செயல்பாடுகள் உள்ளிட்ட தகவல்களை இந்த விழாவின் மூலமாக விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம் என்றார்.

இதில், கால்நடைப் பராமரிப்புத் துறை, வேளாண் வணிகத் துறை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு அமைச்சர் வழங்கினார். மேலும், விவசாயிகளுக்கான தொழில்நுட்பக் கையேடு, உழவர் வழிகாட்டி கையேடு ஆகியவற்றை வெளியிட்டார்.

விழாவில், தமிழக அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி எஸ்.டி.கே. ஜக்கையன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம்.வி. கருப்பையா (சோழவந்தான்), எம். முத்துராமலிங்கம் (திருமங்கலம்), சோழவந்தான் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் அன்னகளஞ்சியம் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், வேளாண் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்**

விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த முன்வர வேண்டும் என மின்துறை அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் தெரிவித்தார்.

நத்தம் ஊராட்சி ஒன்றியம், செந்துறையில் ஞாயிற்றுக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தலைமை வகித்தார். வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பணைக்குழு, கால்நடை பராமரிப்புத் துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிய மின்துறை அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் உழவர் பெருவிழாவை துவக்கி வைத்து பேசியது:

விவசாயத் துறையில் ஒரு புரட்சி ஏற்படுத்தும் வகையில் இரண்டாம் பசுமைப் புரட்சி திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, இடுபொருள், பயிர் பாதுகாப்பு, நீர் சிக்கனம் உள்ளிட்டவை குறித்து, விவசாயிகளுக்கு உதவும் வகையில் இந்த விழா துவக்கப்பட்டுள்ளது.

மேலும் தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி கையேடுகளையும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மண்வளத்தையும், நீர்வளத்தையும் அறிந்து, அதற்கேற்ப நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க விவசாயிகள் முன்வர வேண்டும். செந்துறை ஊராட்சியில் கடந்த 2 ஆண்டுகளில் ரூ.6.30 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ரூ.1 கோடி செலவில், செந்துறையில் புதிய பேருந்து நிலையம் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்றார்.

நிகழ்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல கூடுதல் இணை இயக்குநர் எஸ்.கே.அறிவழகன், வேளாண்மைத்துறை பொறியியல்துறை செயற்பொறியாளர் த.செல்வகுமார், காந்திகிராம பல்கலை. வேளாண்மை கல்லூரி முதல்வர் து.செந்தில்வேல்,

கால்நடை ஆராய்ச்சி நிலைய தலைவர் க.சேதுராமன், வேடசந்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் ச.பழனிச்சாமி, நத்தம் தொகுதி செயலர் என்.கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மைத் துறை இணை இயக்குநர் நா.த.சம்பத்குமார் அனைவரையும் வரவேற்றார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ந.சந்திரசேகர் நன்றி கூறினார்.

**கொடைக்கானலில் உழவர் பெருவிழா ரத யாத்திரை**

கொடைக்கானலில் தமிழக முதல்வரின் இரண்டாம் பசுமைப் புரட்சியான உழவர் பெருவிழா ரத யாத்திரை நடைபெற்றது.

உழவர் பெருவிழா திட்டம் கொடைக்கானல் பள்ளங்கி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு கொடைக்கானல் ஊராட்சி மன்றத் தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் பொன்னுத்துரை முன்னிலை வகித்தார். தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் ராஜா முகமது வரவேற்றார்.

**சந்தையின் தேவையை உணர்ந்த விவசாயம் லாபம் தரும் : ஆட்சியர்**

விவசாயிகள் ஒரே மாதிரியான பயிர்களை உற்பத்தி செய்யாமல், சந்தையின் தேவையை உணர்ந்து விவசாயம் செய்தால் அது லாபம் தரும் என்றார் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம், சருகனி ஊராட்சியில் உழவர் பெருவிழாவை ஞாயிற்றுக்கிழமை தொடக்கி வைத்து, 19 பயனாளிகளுக்கு ரூ.4.67 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசியதாவது:

வேளாண் துறை சார்பில் மாவட்டத்தில் 12 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 521 வருவாய் கிராமங்களில் ஞாயிற்றுக்கிழமை முதல் ஒரு மாத காலம் வரை உழவர் பெரு விழா நடத்தப்படுகிறது. முதல்கட்டமாக 17 வருவாய் கிராமங்களில் ஞாயிற்றுக்கிழமை உழவர் பெருவிழா துவங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்குவதுடன், பெரு விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் பொருள்களின் அளவை இரண்டு மடங்காக அதிகரிக்கச் செய்வதே உழவர் பெருவிழாவின் நோக்கம்.

விழா நடைபெறும் ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் அனைத்து துறை அலுவலர்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை முகாமில் பங்கேற்று வேளாண் துறை மூலம் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் விவரம், தோட்டக் கலைத் துறை மூலம் குறைந்த நிலப்பரப்பில், குறைந்த தண்ணீர் செலவில் ஒட்டுரகப் பயிர்கள் உற்பத்தி, வேளாண் பொறியியல் மூலம் வேளாண் உபகரணம் பெறுவது, இயக்குவது குறித்து பயிற்சி வழங்குவர்.

நெற்பயிரை மட்டும் தொடர்ந்து பயிரிடாமல் கடலை, பருப்பு வகை, சிறுதானியம், பருத்தி ஆகியவற்றையும் விளைவிக்க வேண்டும். இதன் காரணமாக விவசாயம் செய்யும் மண்ணின் தன்மை மாறுவதுடன், லாபம் அதிக அளவிலும் கிடைக்கும். அனைத்து விவசாயிகளும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான பொருள்களை உற்பத்தி செய்யாமல் சந்தையின் தேவைக்கேற்ப பயிர்களை உற்பத்தி செய்தால் அதிக லாபம் பெற முடியும்.

சிவகங்கை மாவட்டத்தில் ஏற்கனவே 10 கால்நடை மருத்துவமனைகள் செயல்பட்டு வருகிறது. தற்போது ரூ.1.2 கோடி மதிப்பில் மேலும் 10 மருத்துவமனைகள் கட்டப்பட்டு வருகிறது. மருத்துவ வசதிகள் உருவாக்கப்பட்டு வருவதால், கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். இதன் மூலம் மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிக்கும் என்றார் ஆட்சியர்.

விழாவில் சோழன் சித.பழனிச்சாமி எம்.எல்.ஏ., தேவகோட்டை ஒன்றிய குழுத் தலைவர் செந்தில்நாதன், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**உழவர் பெருவிழா: பிரசார ஊர்தி பயணம் தொடக்கம்**

விருதுநகர் மாவட்டத்தில் உழவர் பெருவிழா பிரசார பயண ஊர்தியை மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ராஜு ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார் .

தமிழக முதல்வரின் உத்தரவுப்படி நிகழாண்டிலும் உழவர் பெருவிழா நிகழ்ச்சி தொடங்கி, தொடர்ந்து மே 20ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இவ்விழா மாவட்டத்தில் 505 வருவாய் கிராமங்களிலும் குறிப்பிட்ட நாள்களில் நடைபெறும்.

இதில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் விற்பனை துறை, கால்நடை பராமரிப்பு துறை, கூட்டுறவு விவசாய வங்கி உள்ளிட்ட 16 துறைகளைச் சேர்ந்த அலுவலர்களால் உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது. இதில், 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள வருவாய் கிராமங்கள் தோறும் விவசாய பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தொழில்நுட்ப உத்திகள், அரசின் நலத்திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்படும். அதோடு, இது தொடர்பான கருத்துக் காட்சிகள், செயல் விளக்கப் படம், கிராமிய கலைநிகழ்ச்சிகள் மூலம் விளக்கி கூற பிரசார வாகனம் முன் செல்ல இருக்கிறது.

இந்நிகழ்ச்சியின் தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடந்தது. இதில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ராஜு பங்கேற்று உழவர் பெருவிழா பிரசார வாகன ஊர்தியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) முருகதாஸ், துணை இயக்குநர் கனகராஜ், உழவர் பயிற்சி மையத்தின் வேளாண் வணிக இயக்குநர் செண்பகராஜ், வேளாண் வணிக துணை இயக்குநர் முத்துமுனியாண்டி, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் சமுத்திரபாண்டி, வேளாண்மை உதவி பொறியாளர் சாந்தி உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## உழவர் பெருவிழா பிரசாரப் பேரணி: ஆட்சியர் தொடக்கி வைத்தார்

ராமநாதபுரம் மாவட்டத்தில் உழவர் பெருவிழா தொடர்பான பிரசாரப் பேரணியை மாவட்ட ஆட்சியர் க. நந்தகுமார் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

விழாவிற்கு வேளாண் இணை இயக்குநர் கா.சக்திமோகன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சௌந்தர்ராஜன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ராமநாதபுரம் வட்டாரத்தில் அச்சுந்தன்வயல், மண்டபம் வட்டாரத்தில் பட்டினம் காத்தான், திருப்புல்லாணியில் திருஉத்தரகோசமங்கை, ஆர்.எஸ். மங்கலம் வட்டாரத்தில் ராதானூர், பரமக்குடி வட்டாரத்திற்கு அரியனேந்தல் கிராமம் உள்பட மாவட்டத்தில் உள்ள 11 ஒன்றியங்களுக்கும் 11 பிரசார ஊர்திகளை ஆட்சியர் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

விழாவில் ராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சாந்தி சாத்தையா உள்பட வேளாண் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பொள்ளாச்சியில் உழவர் பெருவிழா துவக்கம்

வேளாண்துறை சார்பில் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு தாலுகா பகுதிகளில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு சார்பில் வேளாண்துறையில் செயல்படுத்தி வரும் மானியத் திட்டங்கள் மற்றும் பயிர்க் கடன்கள், நவீன விவசாய இயந்திரங்கள், நிலத்திற்கேற்ப பயிரிடப்பட வேண்டிய பயிர்கள், விதைகள் போன்றவற்றை விவசாயிகள் அறியும் விதமாக உழவர் பெருவிழா கடந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், ஆனைமலை ஒன்றியம், கிணத்துக்கடவு தாலூக்கா ஆகிய பகுதியில் ஞாயிற்றுக்கிழமை உழவர் பெருவிழா துவங்கப்பட்டது.

பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு தாலுகா பகுதிகளில் உள்ள கிராமங்களில் தொடர்ந்து 29 நாட்கள் வேளாண்துறையில் நடைபெற்று வரும் திட்டங்களை விவசாயிகள் அறியும் விதமாக வாகனம் மூலமாக பிரசாரம் மற்றும் நவீன இயந்திரங்கள் குறித்த கண்காட்சிகள் நடைபெற உள்ளன.

பெ.நா.பாளையம் வட்டாரத்தில்: பெ.நா.பாளையம் வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் இந்த வட்டாரத்தில் வரும் மே 5-ஆம் தேதி வரை உழவர் பெருவிழா பல்வேறு இடங்களில் நடைபெற உள்ளது.

பெ.நா.பாளையம், பாலகிருஷ்ணன் திருமண மண்டபத்தில் நடந்த இதன் தொடக்க விழாவுக்கு பெ.நா.பாளையம் ஒன்றியத் தலைவர் வீரபாண்டி விஜயன், அதிமுக ஒன்றிய செயலாளர் கோவனூர் துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குநர் மு.ஷபி

அகமது வரவேற்றார். பெ.நா.பாளையம் பேரூராட்சித் தலைவர் பி.ஆர்.ஜி. அருண்குமார், உழவர் பெருவிழா நோக்கங்களை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து அதிக மகசூல் எடுத்த விவசாயிகளுக்கு அரசின் மானியத் தொகைகள், உரங்கள் வழங்கப்பட்டன. வேளாண்மை அலுவலர் ஆர்.சீனிராஜ் நன்றி கூறினார்.விழாவில் நூற்றுக் கணக்கான விவசாயிகள் பங்கேற்றனர்.

**சிறு தானியங்களை சாகுபடி செய்ய வேண்டும்**

சிறு தானிய வகைகளை விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும் என வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன் கூறினார்.

திருப்பூர் மாவட்ட வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா பல்லடம் சாலை லட்சுமி கல்யாண மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதற்கு ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமை வகித்தார்.

வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன், 114 பயனாளிகளுக்கு ரூ.73 லட்சம் மதிப்பிலான வேளாண் நலத்திட்ட உதவிகள், உழவர் பெருவிழா-2013 தொழில் நுட்பக் கையேடு, 95 வேளாண் தொழில்நுட்ப குறும்படங்கள் அடங்கிய குறுந்தகடு, உழவர் பெருவிழா-2013 மையக் கருத்துப் பாடல்கள் அடங்கிய குறுந்தகடு ஆகியவற்றை வெளியிட்டார். விழாவில் அவர் பேசியது:

விவசாயத்திற்கென பட்ஜெட்டில் ரூ.5,189.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இதுவரை இல்லாத அளவில் விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் வழங்குகிறார் முதல்வர். விவசாயிகளுக்கு பாகுபாடின்றி மானியமும், இடுபொருள்களும் கிடைக்க முதல்வர் வழிவகை செய்துள்ளார்.

ஜல்லிபட்டியில் 80 ஏக்கர் நிலத்தில் தேசிய தென்னை ஆராய்ச்சி மையம் அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். விவசாயிகள் சிறுதானியங்களை சாகுபடி செய்து மக்களுக்கு உதவ வேண்டும் என்றார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம்: 7 மாவட்டங்களில் விவசாய நிலங்கள் வழியாக எரிவாயு குழாய் அமைக்கும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், விவசாய நிலங்களை அதே நிலையில் மறுபடியும் விவசாயிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் முதல்வர் உத்தரவிட்டார். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றார்.

அறநிலையத்துறை அமைச்சர் எஸ்.எம்.ஆனந்தன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் என்.எஸ்.என்.நடராஜ்(காங்கயம்), அ.அ.கருப்புசாமி (அவிநாசி), மாவட்ட ஊராட்சித் தலைவர் எம்.சண்முகம், மேயர் அ.விசாலாட்சி, துணை மேயர் திரு.சு.குணசேகரன், ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.சாமிநாதன், வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி, வேளாண்மை இணை இயக்குநர் எம்.முகமது கலிமுல்லா ஷெரீப், துணை இயக்குநர் திரு.ப.சந்தான கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காய்கறி வரத்து குறைவு; விலை உயர்வு**

காய்கறி வரத்து குறைந்ததால் ஈரோடு காய்கறி சந்தையில் காய்கறி விலை அதிகமாக இருந்தது.

ஈரோடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு தாளவாடி, ஒசூர், உதகை ஆகிய இடங்களில் இருந்து காய்கறிகள் வருகின்றன. நேதாஜி காய்கறி சந்தை முக்கிய சந்தையாக உள்ளது. இங்கு 500-க்கும் மேற்பட்ட காய்கறி மற்றும் பழக்கடைகள் உள்ளன. மாநகரின் பல பகுதிகளில் இருந்தும் சில்லரை வியாபாரிகள் இந்தச் சந்தையில் இருந்துதான் காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையில் காய்கறி விலை சராசரியாக கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.40 வரை அதிக விலைக்கு விற்பனை ஆனது. வெள்ளிக்கிழமை கிலோ ரூ.80-க்கு விற்பனையான பீன்ஸ், சனிக்கிழமை ரூ.120-க்கு விற்பனையானது. தக்காளி ரூ.15-ல் இருந்து ரூ.30-க்கு விற்பனை ஆனது. இதைபோல கிலோ ரூ.40-க்கு விற்கப்பட்ட கேரட் ரூ.60-க்கு விற்பனையானது.

நேதாஜி சந்தையில் சனிக்கிழமை காய்கறிகளின் விலை (கிலோவில்) விவரம்: கத்தரிக்காய் ரூ.40, வெண்டைக்காய் ரூ.40, கேரட் ரூ.60, பீன்ஸ் ரூ.120, சவ்சவ் ரூ.40, கொத்தவரங்காய் ரூ.40, பச்சை மிளகாய் ரூ.70, வெள்ளரிக்காய் ரூ.40, சேனைக்கிழங்கு ரூ.20, முருங்கைக்காய் ரூ.30, பீட்ரூட் ரூ.50, அவரை ரூ.50, மாங்காய் ரூ.20, பீர்க்கங்காய் ரூ.40, புடலங்காய் ரூ.30, உருளைக் கிழங்கு ரூ.25, பெரிய வெங்காயம் ரூ.20, சின்ன வெங்காயம் ரூ.45, பாகற்காய் ரூ.30.

இதுகுறித்து நேதாஜி சந்தை வியாபாரிகள் கூறுகையில், கடந்த 2 நாள்களுக்கு முன் தெலுங்கு வருடம் பிறந்ததால், ஆந்திராவுக்கு காய்கறி பாரம் ஏற்றி ஏராளமான லாரிகள் சென்றுவிட்டன. இதனால் ஈரோட்டுக்கு வர வேண்டிய காய்கறிகளின் அளவு குறைந்துவிட்டதால் விலை உயர்ந்துள்ளது.

மேலும் அதிக இடங்களில் வறட்சி நிலவுவதால் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக காய்கறி உற்பத்தியும் குறைந்துவிட்டது. இன்னும் 2 நாள்களில் விலை குறைந்து விடும் என எதிர்பார்க்கிறோம் என்றனர்.

**"சொட்டுநீர்ப்பாசனத்துக்கு விவசாயிகள் மாற வேண்டும்**

வறட்சி நிலவுவதால் சொட்டுநீர்ப்பாசனத்துக்கு விவசாயிகள் மாற வேண்டும் என்று, வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகே காஞ்சிகோவில் பேரூராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவை துவக்கி வைத்து அமைச்சர் பேசியது: தமிழக பட்ஜெட்டில் விவசாயத் துறைக்கு மட்டும் ரூ.5,300 கோடி நிதியை முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கியுள்ளார். விவசாயிகளுக்கு ரூ.450 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வளமும், நலமும் பெற்று வட்டியில்லா கடனையும் பெற்று, அக்கடனை நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் செலுத்துபவர்களுக்கு வட்டி வசூலிக்கப்படமாட்டாது.

பருவமழை பொய்த்துவிட்டதால் நீர் ஆதாரங்களும் குறைந்து கொண்டே வருகிறது. எனவே இருக்கின்ற நீரை வைத்து விவசாயிகள் தங்கள் வேளாண் உற்பத்திப் பொருள்களை அதிக

அளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உயரிய சிந்தனையில், இரண்டு மடங்கு வேளாண் உற்பத்தியும், அதனால் மூன்று மடங்கு பலன்களை விவசாயிகள் பெறுகின்ற நோக்கில் இரண்டாவது பசுமைப்புரட்சிக்கு முதல்வர் வித்திட்டுள்ளார்.

அதன்படி, இருக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். அதற்கு சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்திலும், சிறு, குறு விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும், சொட்டுநீர்ப்பாசனம் அமைத்து கொடுக்கப்படுகிறது.

வறட்சிக் காலங்களில் அனைத்து விவசாயிகளும் சொட்டுநீர்ப்பாசனத்துக்கு மாற வண்டும்.

இத்திட்டத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள விவசாயிகள் முன் வர வேண்டும். அதேபோல ஒருங்கிணைந்த பண்ணைகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் ஆடுகள், மாடுகள், கோழிகள் வளர்த்தல், மண்புழு உரங்கள் தயாரித்தல் போன்றவற்றை மேற்கொள்ள அரசு ரூ.75,000 மானியமாக வழங்குகிறது.

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை சார்பாக சிறு தானியங்கள் மேம்படுத்துதல் குறித்த குறுந்தகட்டினையும் (சி.டி), மாவட்ட அளவிலான உழவர் கையேட்டினையும் வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் வெளியிட, மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் பெற்றுக் கொண்டார்.

விழாவில் 39 விவசாயிகளுக்கு ரூ.8.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார். வருவாய் அலுவலர் சு.கணேஷ், வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, தோட்டக்கலை துணை இயக்குநர் ராபர்ட் வின்சென்ட், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜி.வெங்கடேசன், பெருந்துறை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.பெரியசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவே உழவர் பெருவிழா**

உழவர் பெருவிழாக்களில் பங்கேற்று விவசாயிகள் தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளலாம் என ஆட்சியர் விஜய் பிங்ளே கூறினார்.

ஆரணி ஒன்றியத்துக்குள்பட்ட முள்ளண்டிரம் கிராமத்தில் உழவர் பெருவிழாவை மாவட்ட ஆட்சியர் விஜய்பிங்ளே ஞாயிற்றுக்கிழமை துவக்கி வைத்தார்.

விழாவில் அவர் பேசியதாவது:

தமிழக முதல்வரின் உத்தரவின்பேரில், சித்திரை 1ஆம் தேதி முதல் 30ஆம் வரை தினமும் கிராமங்கள்தோறும் உழவர் பெருவிழா நடைபெற உள்ளன.

இரண்டாம் பசுமை புரட்சியை நோக்கி நாடு செல்லும் வகையிலும், இரண்டு மடங்கு உற்பத்தியும், மூன்று மடங்கு வருவாய் ஈட்டும் வகையிலும் இவ்விழாக்கள் அமையும்.

தமிழக முதல்வரின் விஷன் 2023 திட்டம் வெற்றியடையவும், வறுமை இல்லா மாநிலமாக உருவாகவும் உழவர் பெருவிழாக்கள் அமையும்.

பெருவிழாவில் பங்கேற்க வரும் அதிகாரிகளிடம் மீன்வளம், கால்நடை வளர்ப்பு, விவசாயம் உள்ளிட்டவை குறித்து சந்தேகங்களைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். பின்னர் விவசாயிகள் திட்டம் தீட்ட வேண்டும். மேலும், அரசின் திட்டம் அனைத்தையும் பயன்படுத்தி முன்னேற வேண்டும். தமிழகத்தில் திருவண்ணாமலை மாவட்டம், 1067 ஊராட்சிகளைக் கொண்டு மூன்றாவது இடத்தில் உள்ளது என்றார் விஜய் பிங்ளே.

ஒன்றியக் குழுத் தலைவர் சாந்தி சேகர், முன்னாள் எம்எல்ஏ ஜெமினி ராமச்சந்திரன், வேளாண்மை துறையின் இணை இயக்குநர் சக்கரவர்த்தி, விவசாயிகள் சங்கத் தலைவர் மணிகண்டன், வேளாண்மை உதவி இயக்குநர் பி.சத்தியமூர்த்தி, அதிமுக ஒன்றியச் செயலர் பி.ஆர்.ஜி.சேகர், ஜெயலலிதா பேரவையின் மாவட்டச் செயலர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன், தொகுதிச் செயலர் ஏ.சந்தானம், மாவட்ட துணைச் செயலர் கருணாகரன், மாவட்ட கவுன்சிலர் ஜெ.சம்பத், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. விவசாயிகளுக்கான கண்காட்சியும் நடைபெற்றது.

**உழவர் பெருவிழா தொடங்கியது**

தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் உழவர் பெருவிழா, ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. மொத்தமுள்ள 1067 வருவாய் கிராமங்களில் இவ்விழா தொடர்ந்து மே 20 வரை நடைபெறுகிறது.

விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக உயர்த்தவும், வேளாண்மை உற்பத்தியை இரு மடங்காக உயர்த்தவும் தமிழகம் முழுவதும் உழவர் பெருவிழாவை நடத்த தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த ஆண்டு உத்தரவிட்டார். அதன்படி, தொடர்ந்து 2-வது ஆண்டாக இவ்விழா நடத்தப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இவ்விழா தொடங்கியது. திருவண்ணாமலை ஒன்றியத்துக்குள்பட்ட ஆடையூர், வேங்கிக்கால், கோசாலை கிராமங்களிலும், துரிஞ்சாபுரம் ஒன்றியத்துக்குள்பட்ட தேவனாம்பட்டு, காட்டுப்புத்தூர் கிராமங்களிலும், கீழ்பென்னாத்தூர் ஒன்றியத்தில் கோணலூர், ராஜந்தாங்கல் கிராமங்களிலும், செங்கம் ஒன்றியத்தில் செங்கம் கிராமத்திலும், தண்டராம்பட்டு ஒன்றியத்தில் மேல்முத்தனூர், மோத்தக்கல் கிராமங்களிலும் உழவர் பெருவிழாக்கள் நடைபெற்றன.

மேலும், கலசப்பாக்கம் ஒன்றியத்தில் கீழ்பாலூர், மேல்பாலூர், சேத்துப்பட்டு ஒன்றியத்தில் அரியாத்தூர், மேற்கு ஆரணி ஒன்றியத்தில் புதுப்பாளையம், கீழ்நகர் கிராமங்களிலும், வந்தவாசி ஒன்றியத்தில் வழூர், அகரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலும் உழவர் பெருவிழாக்கள் நடைபெற்றன.

திங்கள்கிழமையும் பல்வேறு கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெறுகிறது.

இவ் விழாக்களில் வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை, விதைச்சான்று துறை, வேளாண்மை வணிகம், வேளாண் பொறியியல் துறை உள்ளிட்ட வேளாண் சார்ந்த அனைத்துத்துறை அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர். எனவே, விவசாயிகள் இவ் விழாவில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஆட்சியர் விஜய் பிங்ளே கேட்டுக்கொண்டுள்ளார்.

போளூர்

போளூர் அருகேயுள்ள மாம்பட்டு ஊராட்சியில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் சித்ரா வரவேற்றார்.  ஊராட்சி மன்றத் தலைவர் ராஜசேகரன், உதவி வேளாண்மை அலுவலர் (தோட்டக்கலை துறை) அழகேசன், ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் ரமேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

புதுப்பாளையம்

புதுப்பாளையம் ஒன்றியத்துக்குள்பட்ட காஞ்சி கிராமத்தில் உழவர் பெருவிழாவின் தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு தலைமை வகித்தார். விழாவை கலசப்பாக்கம் எம்எல்ஏ., அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி தொடங்கிவைத்தார்.

மாவட்ட வணிகவரித்துறை ஆலோசனை குழு உறுப்பினர்கள் புருஷோத்தமன், சுந்தரமூர்த்தி, கவுன்சிலர் வெங்கடேசன், வேளாண்மை உதவி இயக்குநர் செல்லப்பாண்டியன், அதிமுக மாவட்ட இலக்கிய அணி செயலர் நாராயணன், மாவட்ட மாணவரணி இணைச் செயலர் உஷாநாதன், துணை வேளாண்மை அலுவலர் சேகரன், உதவி வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ், தோட்டக்கலை உதவி இயக்குநர் சந்தரன், இளநிலைப் பொறியாளர் வரதராஜிலு, உதவி வேளாண்மை அலுவலர் அச்சுதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அனக்காவூர்

அனக்காவூர் ஒன்றியத்துக்குள்பட்ட இளநீர்குன்றம் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில், 34 விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், 25 விவசாய நிலங்களில் மண்மாதிரி சேகரிப்பும் நடைபெற்றது.

ஒன்றியக் குழுத் தலைவர் நிர்மலா மூர்த்தி தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ஏழுமலை, அலுவலர்கள் சி.ஆர்.ராஜா, ஆறுமுகம், பொறியியல் துறை உதவி பேராசிரியர் பாலமுருகன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் டாக்டர்.திருக்குமரன், உதவி தோட்டக்கலை அலுவலர் சுரேஷ்குமார், கரும்பு ஆலை அலுவலர் ரவிச்சந்திரன், அட்மா திட்ட மேலாளர் பெ.பாலமுருகன், உதவி வேளாண்மை அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுனர்கள் அன்பரசு, இளையராஜா, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்

தெய்வசிகாமணி, அதிமுக மாவட்ட பிரதிநிதி தனசேகரன்,  ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தருமபுரி மாவட்டத்தில் உழவர் பெருவிழா தொடக்கம்**

விவசாய விளை பொருள்களின் விளைச்சலை அதிகரிக்கும் வகையில், தருமபுரி மாவட்டத்தில் உள்ள 470 வருவாய் கிராமங்களில் வேளாண் துறையின் சார்பில் உழவர் பெருவிழா கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

அரூர் ஊராட்சி ஒன்றியம் பறையப்பட்டிபுதூரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி தலைமை வகித்தார். தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் விழிப்புணர்வு ரதத்தை கொடியசைத்து தொடக்கி வைத்து, வேளாண்மை தொடர்புடைய தொழில் நுட்பக் கையேட்டினை வெளியிட்டார். பிறகு, விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசியது:

தமிழக விவசாயிகள் பயனடையும் வகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை வணிகம், கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற துறைகளின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளில் வேளாண்மைத் துறையின் மூலம் ரூ.21.37 கோடி மதிப்பில் விதைகள், தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்கியதன் மூலம் 1,86,910 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தோட்டக்கலைத் துறையின் மூலம் வீரிய ஒட்டுக் காய்கறி விதைகள், துல்லியப் பண்ணையம், திசு வாழை போன்ற திட்டங்கள் மூலம் 13.05 கோடி மதிப்பில் 13,531 விவசாயிகளும், 3,272 ஹெக்டேர் பரப்பில் நுண்ணீர் பாசனம் ரூ.15.75 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு 6,582 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண் பொறியியல் துறையின் மூலம் பவர் டில்லர், நெல் அறுவடை இயந்திரம், பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் உள்ளிட்டவைகளுக்கு 50 சத மானியம் என்ற அடிப்படையில், ரூ.7.55 கோடி மானியம் வழங்கப்பட்டு 1,738 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றார் அவர்.

காரிமங்கலம் அருகேயுள்ள நாகனம்பட்டி கிராமத்தில் பாலக்கோடு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன் தலைமையில் உழவர் பெருவிழா  நடைபெற்றது.

விவசாயிகளுக்கு மண் மாதிரி எடுத்தல், பார்தீனியம் ஒழிப்பு, எலி ஒழிப்பு, உயிர் உர விதை நேர்த்தி, வாழை, கிழங்கு விதை நேர்த்தி, மஞ்சள் அழுகல் விதை நேர்த்தி, களை எடுத்தல் போன்ற செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. இந்தச் செயல்

விளக்கங்களை வட்டார வேளாண் அலுவலர் இளங்கோவன், துணை வேளாண் அலுவலர் ராமநாதன் உள்ளிட்டோர் செய்து காட்டினர். மேலும், 110 விவசாயிகளுக்கு ரூ. ஒரு லட்சம் மதிப்பிலான இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

பென்னாகரம் வட்டம், ஏரியூர் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு 100 சத மானியத்துடன் கூடிய சொட்டு நீர்ப் பாசனக்  கருவிகளை பென்னாகரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் ந.நஞ்சப்பன் வழங்கினார். தோட்டக்கலைத் துறை  துணை இயக்குநர் எஸ்.முகுந்தன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பெரியசாமி, முருகேசன், பன்னீர்செல்வம், சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தருமபுரி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய உழவர் பெரு விழா நிகழ்ச்சிகள் தொடர்ந்து 30 நாள்களுக்கு நடைபெற உள்ளன.

**கரூர் மாவட்டத்தில் உழவர் பெருவிழாவுக்கு ரூ. 76 நிதி ஒதுக்கீடு**

கரூர் மாவட்டத்தில் உழவர் பெருவிழாவுக்காக ரூ. 76 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் போக்குவரத்துத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி.

கரூர் மாவட்டம் கோயம்பள்ளி ஊராட்சியில் உழவர் பெருவிழாவைத் தொடக்கி வைத்து, விவசாயிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்க அவர் மேலும் பேசியது:

தமிழகத்தில் 2-ம் பசுமை புரட்சியை உருவாக்க, தமிழக அரசு உழவர் பெருமக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நிகழாண்டில் வேளாண் துறைக்கு ரூ. 3,804 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றிலேயே வேளாண் துறைக்கு இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்டதில்லை. பயிர்கடனுக்கு வட்டி மானியம் வழங்குவதறாக மட்டும் ரூ. 160 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ரூ. 35 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, தமிழகத்தில உள்ள 16,313 ஊராட்சிகளிலும் உழவர் பெருவிழா நடத்தப்பட்டது. இதன் மூலம் 38 லட்சம் விவசாயிகள் பயன்பெற்றனர். நிகழாண்டில் ரூ. 46 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் 203 வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழாவை நடத்த ரூ. 76 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மக்கள் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என்றார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகித்தார். கரூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் மு. தம்பிதுரை, கிருஷ்ணராயபுரம் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் செ. காமராஜ், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மார்க்கண்டேயன், தாந்தோணி ஒன்றியக் குழுத் தலைவர் ராமலிங்கம், வேளாண்மை இணை இயக்குநர் தெய்வேந்திரன், தோட்டக்கலை துணை இயக்குநர் சதாசிவம், கோயம்பள்ளி ஊராட்சித் தலைவர் பாஸ்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனைத் துறை, வேளாண் பல்கலைக்கழகம்,

கால்நடை கிளைகள், வேளாண் பொறியியல் துறை, மீன் வளத்துறை ஆகியவை மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தன.

கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உழவர் பெருவிழா வரும் மே மாதம் 15-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

**விவசாயப் பணிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க அரசுக்குப் பரிந்துரை: நாகை ஆட்சியர் தகவல்**

நிகழாண்டிலும் விவசாயப் பணிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழக அரசின் கவனத்துக்குக் கொண்டுச் செல்லப்பட்டுள்ளது என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

நாகை மாவட்டம், தேமங்கலம் ஊராட்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் அவர் பேசியது :

மழை இல்லாததாலும், மேட்டூரில் தண்ணீர் இல்லாததாலும் சம்பா சாகுபடி கடும் பாதிப்புகளை சந்திக்க நேரிட்டது. இருப்பினும், விவசாயம் பொய்த்து விடக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு பல்வேறு திட்டங்களை சம்பா சிறப்பு தொகுப்பு திட்டங்களாக அறிவித்து செயல்படுத்தியதன் மூலம் பெரும் இழப்பு சீர் செய்யப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கான நிவாரணத்திட்டத்தில் நாகை மாவட்டத்துக்கு ரூ. 272 கோடி நிவாரண நிதி பெறப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. டீசல் மானியமாக ரூ. 2.11 கோடி பெறப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. டீசல் மானியமாக மேலும் ரூ. 2.75 கோடி கோரப்பட்டுள்ளது. இந்த நிதி கிடைத்ததும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

வேளாண் துறை சிறப்பாக செயல்பட்டு விவசாயிகளிடம் நற்பெயரை பெற வேண்டும். கூடுதல் எண்ணிக்கையில் உழவு இயந்திரங்களை கையிருப்பில் கொண்டு, விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்க வேண்டும்.

தமிழக அரசு அறிவித்த ரூ. 1,200 கோடி மதிப்பிலான தொலைநோக்குத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. விவசாயிகளின் கருத்துகளைக் கேட்டறிந்து இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

சென்ற ஆண்டில் விவசாயப் பணிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டதை போல நிகழாண்டிலும், விவசாயப் பணிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழக அரசின் கவனத்துக்குக் கொண்டுச் செல்லப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

விழாவில், விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகளை சிறந்த வகையில் பராமரித்ததற்காக 18 பேருக்குப் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. ரூ. 2.9 லட்சம் மதிப்பில் 4 விவசாயக் குழுக்களுக்கு நடவு இயந்திரம், பவர் டில்லர், களையெடுக்கும் கருவி ஆகியன வழங்கப்பட்டது.

வேளாண் துறை இணை இயக்குநர் உ. ராஜேந்திரன், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர் பிருத்வி ராஜ், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் தசரதராமன், சிக்கல் வேளாண் ஆராய்ச்சி நிலையத் தலைவர் ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் தங்க. கதிரவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**உழவர் பெருவிழா: விழிப்புணர்வு வேளாண் ரதம் தொடக்கம்**

குமரி மாவட்டத்தில் உழவர் பெருவிழாவையொட்டி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், வேளாண் ரதத்தை மாவட்ட ஆட்சியர் எஸ்.நாகராஜன் ஞாயிற்றுக்கிழமை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வேளாண் ரதத்தை தொடக்கி வைத்து ஆட்சியர் கூறியதாவது, வேளாண் தொழிலை மேம்படுத்தி, தமிழகத்தில் 2-ம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தவும், விவசாயிகள் உற்பத்தித் திறனை இரண்டு மடங்காக அதிகரித்து, வருவாயைப் பெருக்க அனைத்து வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழா நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

குமரி மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் ஏப். 14 முதல் 17-ம் தேதி வரை உழவர் பெருவிழா மற்றும் பாரம்பரியப் பொருள் விழிப்புணர்வு முகாம் நடைபெறுகிறது.

இந்த ரதம் அனைத்து கிராமங்களுக்கும் சென்று, விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியை மேற்கொள்ளும். விவசாயிகளுக்கு துறைவாரியாக கையேடு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. துறை சம்பந்தமாக அந்தந்த பகுதிகளுக்கேற்ற செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்படும் என்றார் ஆட்சியர்.

அரசால் வழங்கப்பட்ட விலையில்லா வெள்ளாடுகளை சிறந்த முறையில் பராமரித்த பயனாளிகளுக்கு பரிசுகளையும், கலை பண்பாட்டுத் துறை சார்பில் கரகாட்ட கலைஞர்களுக்கு கரகம், சலங்கை உள்ளிட்டவைகளையும் ஆட்சியர் வழங்கினார்.

நாஞ்சில் ஏ. முருகேசன் எம்.எல்.ஏ. மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஜான்சிலின் விஜிலா, வேளாண்மை இணை இயக்குநர் சையது அகமது மிரான்ஞ்ஜீ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் உழவர் பெருவிழா தொடக்கம்**

தூத்துக்குடி மாவட்டத்தில் முதலமைச்சரின் உழவர் பெருவிழா அலங்கார ஊர்திகளின் அணிவகுப்புடன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

உழவர் பெருவிழாவையொட்டி, மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒரு அலங்கார ஊர்தி வீதம் 12 அலங்கார ஊர்திகள் மாவட்டம் முழுவதிலும் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை முதல் இம்மாதம் 20-ம் தேதி வரை வரவுள்ளது.

இந்த அலங்கார ஊர்திகளில் வேளாண்மைத் துறை மற்றும் சகோதரத் துறையைச் சேர்ந்த தொழில்நுட்பங்கள் அடங்கிய விளம்பரங்கள் இடம்பெற்றிருக்கும். இந்த அலங்கார ஊர்திகளை தூத்துக்குடி மாவட்ட ஊராட்சித் தலைவர் சின்னத்துரை, வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்தன்ராஜ் மற்றும் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் காந்தி என்ற காமாட்சி, புதூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தனஞ்செயன் ஆகியோர் முன்னிலையில், தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெல்லா கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கனகராஜ், வேளாண்மை இணை இயக்குநர்கள் குருமூர்த்தி, பொன்காத்தபெருமாள், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் ஜவாஹர், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) மதியழகன், வேளாண்மை உதவி இயக்குநர் (தோட்டக்கலை) பழனிவேலாயுதம், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**ஸ்ரீவைகுண்டம் வடகால் பகுதியில் முன்கார் சாகுபடி தொடக்கம்**

ஸ்ரீவைகுண்டம் வடகால் பகுதியில் முன்கார் சாகுபடி பணிகளை விவசாயிகள் தொடங்கி உள்ளனர்.

ஸ்ரீவைகுண்டம் அணைகளிலிருந்து பாசன வசதிபெறும் பகுதிகளுக்கு முன்கார் சாகுபடி அனுமதி கோரி பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அலுவலத்தை கடந்த 3-ம் தேதி விவசாயிகள் முற்றுகையிட்டனர்.

அப்போது பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் முத்துபாண்டியன் தலைமையிலான அதிகாரிகள், விவசாயிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி ஸ்ரீவைகுண்டம் வடகாலில் முன்கார் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என உறுதியளித்தனர். இதை தொடர்ந்து 200 கனஅடி தண்ணீர் விவசாயத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீவைகுண்டம் வடகால் பகுதி பாசன விவசாயிகள் நாற்றங்கால் அமைத்து விவசாயப் பணிகளை தொடங்கியுள்ளனர்.

தினமலர்

## உலக சர்க்கரை உற்பத்தி17.80 கோடி டன்னாக இருக்கும்



மும்பை;நடப்பு 2012-13ம் பருவத்தில், உலகளவில் சர்க்கரை உற்பத்தி, 17.80 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச அளவில், சர்க்கரைக்கான தேவை, 17 கோடி டன் என்ற அளவிலும், இதன் உபரி, 80 லட்சம் டன் என்ற அளவிலும் இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது.நடப்பு பருவத்தில், இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி, 2.35 -2.45 கோடி டன் என்ற அளவில் இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.

மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில், வறட்சியால் கரும்பு பயிரிடும் பரப்பளவு வெகுவாக சரிவடைந்துள்ளது. மேலும், உத்தரபிரதேசத்தில், கரும்புக்குரிய தொகை, வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதால், விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.இதையடுத்து, வரும் 2013-14ம் பருவத்தில், இதன் உற்பத்தி, 2.20 - 2.30 கோடி டன் என்ற அளவில் குறையும் என, கணக்கிடப்பட்டுள்ளது.

## நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 23 சதவீதம் உயர்வு



புதுடில்லி;நடப்பாண்டு மார்ச் மாதத்தில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, 8.96 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டு இதே மாதத்தில், 7.28 லட்சம் டன்னாக இருந்தது.ஆக, மதிப்பீட்டு மாதத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி, 23 சதவீதம் அதிகரித்துள்ளது என, எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சென்ற ஆண்டு நவம்பர் முதல், நடப்பாண்டு மார்ச் வரையிலான, ஐந்து மாத காலத்தில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, 22 சதவீதம் அதிகரித்து, 37.89 லட்சம் டன்னிலிருந்து, 46.32 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

இதில், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயின் பங்களிப்பு, 14 சதவீதமாகவும், கச்சா எண்ணெயின் பங்களிப்பு, 86 சதவீதமாகவும் உள்ளது.மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட, ஐந்து மாத காலத்தில், பாமாயில் இறக்குமதி, 29.47 லட்சம் டன்னிலிருந்து, 38.12 லட்சம் டன்னாக அதிகரித்து உள்ளது. அதேசமயம், இதர எண்ணெய் வகைகள் இறக்குமதி, 7.59 லட்சம் டன்னிலிருந்து, 6.85 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

நடப்பு ஏப்ரல் மாதம், 1ம் தேதி நிலவரப்படி, நாட்டின் சமையல் எண்ணெய் கையிருப்பு, 21 லட்சத்தை எட்டியுள்ளது. இது, 45 நாட்கள் நுகர்விற்கு போதுமானதாகும்.சென்ற, 2011-12ம் பருவத்தில் (நவ.,- அக்.,), இந்தியாவின் தாவர எண்ணெய் இறக்குமதி, ஒரு கோடி டன்னுக்கும் அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம், பண்டிகை காலம் அடுத்தடுத்து வருவதால், வரும் ஜூலை மாதம் முதல், சர்க்கரைக்கான தேவை அதிகரித்து, விலை உயரக்கூடும் என, எதிர்பார்க்கப்படுகிறது.எனவே, இதை எதிர்கொள்ளும் வகையில், சர்க்கரை கையிருப்பை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

## உழவர் பெருவிழா 250 விவசாயிகள் பயன் பெற்றனர்

பாண்டரவேடு:பள்ளிப்பட்டு வட்டத்தில், உழவர் பெருவிழா நேற்று துவங்கியது. இதில், 250 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இதன் படி, நேற்று பள்ளிப்பட்டு ஒன்றியம் பாண்டரவேடு கிராமத்தில் உழவர் பெருவிழா நேற்று துவங்கியது. விழாவை, மாவட்ட கவுன்சிலர் சீனிவாசன் துவக்கி வைத்தார்.

ஒன்றியக்குழு தலைவர் சாந்திபிரியா, துணைத்தலைவர் ஜெயவேலு முன்னிலை வகித்தனர்.

விழாவில், கால்நடை பராமரிப்பு துறையினர், கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் மற்றும் குடற்புழு நீக்கம் உள்ளிட்ட சிகிச்சைகள் அளித்தனர்.

தொடர்ந்து, மண் மாதிரி எடுத்தல், வேளாண் துறையில் உற்பத்தியை பெருக்குவது குறித்தும் பள்ளிப்பட்டு வேளாண்மை உதவி இயக்குனர் முபாரக் பாஷா, செய்முறை விளக்கம் அளித்தார்.

பின், வேளாண் உதவி பொறியாளர் கலைச்செல்வன், விசைத்தெளிப்பான் உள்ளிட்ட கருவிகளை பயன்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

முன்னதாக, உற்பத்தியை இருமடங்காக பெருக்குவது மற்றும் வருமானத்தை மும்மடங்காக உயர்த்துவது குறித்த வேளாண் துறை பிரசார வாகனத்தை, சாந்திபிரியா, கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த விழாவில், பாண்டரவேடு, புண்ணியம், கொல்லாலகுப்பம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த, 250 விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு ஜிப்சம், பசுந்தாள் உரம் விதைகள், விசை தெளிப்பான், மாஞ்செடிகள் உள்ளிட்டவை மானிய விலையில் வழங்கப்பட்டன.

## விவசாயிகளை பாடாய்படுத்தும் மின் தடை கதிர் அறுவடை பணிகளும் பாதிப்பு

ஆர்.கே.பேட்டை:"மின்தடையால் பாசனம் மட்டும் இன்றி அறுவடை மற்றும் கதிரடிக்கும் பணிகளும் பாதிக்கப்படுகின்றன' என, விவசாயிகள் புலம்புகின்றனர்.

நவீன நெல் அறுவடை இயந்திரங்களில் அறுவடை செய்யப்படும் நெற்கதிர், இயந்திரத்திலேயே உடனடியாக நெல் பிரித்து எடுக்கப்படுகிறது.

இதனால், தனியாக கதிரடிக்கும் வேலை இருக்காது. ஆனால், இயந்திர அறுவடையில் வைக்கோல் அதிகளவில் சேதம் அடைகிறது.

இதனால், மாடுகளுக்கு தீவனம் கிடைக்காமல் போகிறது. விவசாய தொழிலாளர்கள் அதிகம் உள்ள இடங்கள் மற்றும் வைக்கோல் வேண்டும் என, நினைக்கும் விவசாயிகள், கையால் அறுவடை செய்கின்றனர். குறைந்த அளவில் பயிர் செய்யும் சிறு விவசாயிகளும் கையால் அறுவடை செய்கின்றனர்.

கையால் அறுவடை செய்யும் விவசாயிகள், நெல் மற்றும் பதர்களை தனித்தனியே பிரிக்க காற்றில்

தூற்றுவது வழக்கம். தூற்றுவதற்கு வசதியாக தற்போது அதிவேக மின்விசிறிகள் பயன் படுத்தப்படுகின்றன.

மின்விசிறியின் மூலம் தூற்றுவதால், வேலை எளிதாகிறது. ஆனால், மின்தடை காரணமாக, இந்த பணிகளிலும் சுணக்கம் ஏற்படுகிறது.

இது குறித்து விவசாயி வேலு கூறுகையில், "அரை ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிட்டுள்ளேன். இயந்திரம் கொண்ட அறுவடை செய்ய இயலாது என்பதால், ஆட்கள் வைத்து அறுவடை செய்துள்ளேன். கதிர் தூற்றுவதற்காக, 4,500 ரூபாய் செலவில் அதிவேக மின்விசிறி வாங்கி பயன்படுத்துகிறேன். ஆனால், பகல் நேரத்தில் நிலவும் மின்தடை காரணமாக, கதிரடிக்கும் பணியில் பாதிப்பு ஏற்படுகிறது' என்றார்.

## உழவர் பெருவிழா ஆலோசனை கூட்டம்

திருக்கோவிலூர் : முகையூர் ஒன்றியத்தில் உழவர் பெருவிழாவை நடத்துவது குறித்து ஆலோசனை கூட்டம் நடந்தது. சித்திரை 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை அனைத்து கிராமங்களிலும் வேளாண்மை சார்ந்த அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து உயர் தொழில்நுட்பம் குறித்த செயல் விளக்க பயிற்சி அளிக்க முதல்வர் ஜெ., உத்தரவிட்டுள்ளார். அதன்படி முகையூர் ஒன்றியம் மணம்பூண்டி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. சேர்மன் துளசிராஜா தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தார். வேளாண்மை சார்ந்த அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து ஒன்றியத்தில் உழவர் பெருவிழாவினை சிறப்பாக நடத்துவது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டது. மாவட்ட கவுன்சிலர்கள் தங்கராஜ், இளங்கோவன், சென்னை சர்க்கரை ஆலை முதுநிலை மேலாளர் பாலகிருஷ்ணன், கால்நடைத்துறை உதவி இயக்குனர் குபேந்திரன், கூட்டுறவு சங்க செயலாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

## குடியநல்லூரில் உழவர் பெருவிழா

தியாகதுருகம் : தியாகதுருகம் ஒன்றியத்தில் குடியநல்லூர் ஊராட்சியில் உழவர் பெருவிழா நடந்தது. தியாகதுருகம் ஒன்றியத்தில் உள்ள குடியநல்லூர் ஊராட்சியில் நடந்த விழாவிற்கு ஒன்றிய சேர்மன் பச்சையம்மாள் வைத்திலிங்கம் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் அய்யப்பா, ராமன், ஊராட்சி தலைவர் மணிவேல், வேளாண்துறை அதிகாரிகள் கிருஷ்ணகுமாரி, லலிதா, ராஜாராம், ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா ஜெயவேல், முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி அலுவலர் ராமச்சந்திரன் வரவேற்றார்.அழகுவேலுபாபு எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். வேளாண் துறையின் திட்டங்கள், அரசு வழங்கும் சலுகைகள் குறித்து விளக்கி கூறப்பட்டது.

வேளாண் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கிருஷ்ணமூர்த்தி, இந்திரஜித், விவசாயத்துறை அலுவலர்கள் செந்தில், வினோத்குமார், பிரபாகரன், தனபால், தியாகை ஊராட்சி தலைவர் மணிவண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உழவர் திருவிழா

செஞ்சி : வல்லத்தில் வேளாண்மைத்துறை சார்பில் உழவர் திருவிழா நடந்தது. வல்லம் அரசு உயர் நிலை பள்ளியில் நடந்த நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை சேர்மன் பரிமளா பன்னீர்செல்வம், கவுன்சிலர் சுகுமார், ஊராட்சி தலை வர் விநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜன் வரவேற்றார். விவசாயிகளுக்கான விருந்து நிகழ்ச்சியை சேர்மன் அண்ணாதுரை துவக்கி வைத்தார். தாழ்த்தப்பட்ட மகளிர் குழுவினருக்கு முழு மானியத்தில் பவர் டில்லர் வழங்கப்பட்டது. மாவட்ட கவுன்சிலர்கள் மஞ்சுளா குமார், ஒன்றிய கவுன்சிலர் குணசேகரன், தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் அறிவழகன், பொறியியல் துறை உதவி பொறியாளர் கலியமூர்த்தி, கடலூர் கரும்பு ஆராய்ச்சி உதவி பேராசிரியர் ஜெயச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

## உழவர் பெருவிழா

ஆத்தூர்: ஆத்தூர் வட்டார உழவர் பெருவிழா துவக்க விழா, நகராட்சி அண்ணா கலை அரங்கில் நடந்தது.
விழாவுக்கு, வேளாண்மை உதவி இயக்குனர் ஏழுமலை தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் சக்ரவர்த்தி வரவேற்றார். வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, பட்டு வளர்ச்சி துறை சார்பில், விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள், வேளாண் கருவிகள், மானியத்திட்டங்கள் குறித்து கருத்துக்காட்சி அமைக்கப்பட்டன.
விழாவில், ஏராளமான விவசாயிகள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உள்ளிட்ட பல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பருத்தி ஏலம் ஒத்திவைப்பு

ஆத்தூர்: ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், இன்று(ஏப்.,15) நடக்க இருந்த, பருத்தி ஏலம், ஒத்திவைக்கப்பட்டது.
ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரத்தினங்களில், மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துக்களின் ஏலம் நடந்து வருகிறது.

அதனால், வெளிமாவட்டம் மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளைவித்த மஞ்சள், பருத்தியை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். அதன்படி, இன்று பருத்தி ஏலம் நடக்க இருந்தது.
இந்நிலையில், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வரும், பருத்தி மூட்டையை அடுக்கி வைக்க போதிய இடவசதி இல்லாததால், இன்று நடக்க இருந்த பருத்தி ஏலத்தை ரத்து செய்து, வரும், 22ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## திட்டம்! ரூ.3.75 கோடியில் வேளாண் இயந்திரம் வழங்க... உழவர் பெருவிழாவில் மாவட்ட கலெக்டர் தகவல்

மோகனூர்: ""இந்த ஆண்டு, 3.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,200 விவசாயிகளுக்கு, வேளாண் இயந்திரங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது,'' என, விழாவில், நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் கூறினார்.
தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான உழவர் பெருவிழா, ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு துவக்க விழா, மோகனூர் காந்தமலை பாலதண்டாயுதபாணி கோவில் வளாகத்தில், நேற்று நடந்தது.
முன்னதாக, சுப்பிரமணியம் கலை அறிவியல் கல்லூரியில் இருந்து விழிப்புணர்வு பேரணி துவங்கியது. நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன், பேரணியை துவக்கி வைத்தார். முக்கிய வீதிகள் வழியாக சென்ற பேரணி, கோவில் வளாகத்தில் முடிவடைந்தது.
அதேபோல், உழவர் பெருவிழா ரதத்தை துவக்கி வைத்த கலெக்டர், அனைத்து துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக் கண்காட்சியை பார்வையிட்டார். பின்னர், தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளுக்கான மருத்துவ முகாமை துவக்கி வைத்து, விலையில்லா ஆடுகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு, பரிசு வழங்கி பேசியதாவது:
மாவட்டம் தோறும், உழவர் பெருவிழா நடத்த வேண்டும் என, தமிழக முதல்வர் உத்தரவின் பேரில், மாவட்டத்தில் உள்ள, 391 வருவாய் கிராமங்களில், இன்று முதல் (நேற்று), மே, 20ம் தேதி வரை நடத்தப்படுகிறது. இரண்டாம் பசுமை புரட்சியினை அடைந்திட வேண்டும் என்ற முனைப்புடனும், அனைத்து விவசாயிகளும், அரசின் முன்னோடி திட்டங்களை தெரிந்து, பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், இந்த விழா செயல்படுத்தப்பட உள்ளது.
வேளாண்மைக்கு தேவைப்படும் உயர்ந்த தொழில் நுட்பங்களை, விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில், செயல் விளக்கங்கள், இந்த உழவர் பெருவிழாவில் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும், விதை நேர்த்தி, திருந்திய நெல் சாகுபடி குறித்தும், சொட்டுநீர்

பாசனம், நுண்ணீர் பாசனம் ஆகியவற்றின் பயன்பாடுகள் பற்றியும், இயந்திரங்களின் செயல்பாடு, அதன் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கப்பெறும் நன்மைகள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், கடந்த ஆண்டு வேளாண் பொறியியல் துறை மூலம், 225 நபர்களுக்கு, 95 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டது. இம்மாவட்ட விவசாயிகள், அதிக அளவில் இயந்திரங்களை பயன்படுத்த முன் வந்ததன் காரணமாக, உரிய கருத்துருக்கள், அரசுக்கு அனுப்பி வைத்ததன் மூலம், இந்த ஆண்டு, 3.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,200 விவசாயிகளுக்கு, வேளாண் இயந்திரங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மோகன், வேளாண் செயற்பொறியாளர் இளையப்பன், மண்டல இணை இயக்குனர் சக்திவேலு, மோகனூர் யூனியன் சேர்மன் சிவசாமி, டவுன் பஞ்சாயத்து சேர்மன் லட்சுமி, சுப்பிரமணியம் கலை அறிவியல் கல்லூரி தாளாளர் பழனியாண்டி, அரசு அலுவலர்கள், விவசாயிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## கி.கிரியில் உழவர் பெருவிழா துவக்கம்: விவசாயிகளுக்கு அழைப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மே, 20ம் தேதி வரை நடக்கும் உழவர் திருவிழாவில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும், என்று கலெக்டர் ராஜேஸ் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதாவின், உத்தரவுபடி உழவர் திருவிழா அனைத்து மாவட்டங்களில் நடந்து வருகிறது. சித்திரை, முதல் நாளான நேற்று (ஏப்.,14) கிருஷ்ணகிரி அடுத்த கெங்கலேரியில் உழவர் பெருவிழா துவக்க விழா நடந்தது. கலெக்டர் ராஜேஸ் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., பிரகாசம் முன்னிலை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் குணசேகரன் வரவேற்றார். மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அசோக்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். உழவர் திருவிழா விளம்பர ஊர்த்தியை கொடியசைத்து துவக்கி வைத்து கலெக்டர் ராஜேஸ் பேசியது:

விவசாயிகள் பயன்பெறும் நோக்கில், முதல்வர் ஜெயலலிதா, உழவர் திருவிழாவை நடத்த உத்தரவிட்டுள்ளார். உழவர் திருவிழாவில் விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் சிறப்பு விழிப்புணர்வு நாடகங்கள், செயல் விளக்கங்கள், கலை நிகழ்ச்சி, கால்நடை மருத்துவ முகாம், தோட்டக்கலை துறை, வேளாண்மை பொறியில் துறை, கால்நடைத்துறை, மீன் வளர்ப்பு துறை போன்ற துறைகளின் செயல்விளக்கங்கள் குறித்த அரங்குகள் இடம் பெற்றுள்ளது.

விழாவில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. மேலும், துறை வாரியாக விவசாயிகளுக்கு அரசு மானிய விலையில் டிராக்டர், டிரில்லர், விசை தெளிப்பான், பவர் ஸ்பிரேயர், நடவு எந்திரம், கை தெளிப்பான், மினி விடார், களை எடுக்கும் எந்திரம், புல்வெட்டும் கருவிகள் உள்ளிட்டவை வழங்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பாண்டில், 10 ஆயிரம் ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் பரப்பை மேலும் அதிகரிக்க, புதிய தொழில் நுட்பத்தை தெரிந்து கொள்ளும் வகையில், செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது. இதனை அந்தந்த பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் அறிந்து கொண்டு, நவீன தொழில் நுட்பத்தில் துவரை சாகுபடி செய்து உயர் லாபம் பெறலாம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரும் மே, 20ம் தேதி அனைத்து வருவாய் கிராமங்களிலும், உழவர் திருவிழா நடத்தப்படுகிறது. இதில் அந்தந்த பகுதி விவசாயிகள் தவறாமல் கலந்து கொண்டு அரசின் மானியங்களை பெற்றும், திட்டங்களை தெரிந்து கொண்டும் பயன் பெறலாம்.

இவ்வாறு கலெக்டர் பேசினார்.

இதனையடுத்து, 96 பயனாளிகளுக்கு, 14 லட்சத்து, 79 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் ராஜேஷ் வழங்கினார். விழாவில் ஆர்.டி.ஓ., மனோகரன், தாசில்தார் மகேஸ்வரன், யூனியன் சேர்மேன் கோவிந்தராஜ், கங்கலேரி பஞ்சாயத்து தலைவர் துரைராஜ் ம்றறும் அனைத்து துறை அலுவலர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கூலி உயர்வுடன் ஆட்கள் பற்றாக்குறை: இயந்திரம் மூலம் நிலக்கடலை அறுவடை

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில், ஆட்கள் பற்றாக்குறையால், கூலியை குறைக்க இயந்திரங்கள் மூலம் நிலக்கடலை அறுவடை பணி செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் ஆடிப்பட்டமாக மானாவாரி நிலங்களான, 40 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. எண்ணெய் வித்து பயிர்களில் முக்கிய இடத்தை வகிக்கும் கடலை, கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாக மட்டுமின்றி, புண்ணாக்கும் தயாரிக்கப்படுகிறது.

கோபி வட்டாரத்தில் சிறுவலூர், கொளப்பலூர், கெட்டிசேவியூர், குருமந்தூர், நம்பியூர் பகுதிகளில் கிணற்று நீரை நம்பியே விவசாயம் செய்யப்படுகிறது. பருவ காலங்களில் பெய்யும் மழை நீரே ஆதாரமாக கொண்டே, மானாவாரி நிலங்கள் உள்ளது. சென்ற இரண்டு ஆண்டுகளாக நடப்பாண்டு மழை இல்லை. கிணற்று நீர் மற்றும் போர்வெல் மூலம் உழவு செய்து, நிலக்கடலை விதைப்பு செய்தனர். ஒரு ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்ய விதைப்பு முதல் அறுவடை காலம் வரை, 15 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.

கோபி சுற்று வட்டாரத்தில் அதிகமாக நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. பருவமழை பொய்யாமல், வெப்பம் நீடிப்பதால், பல இடங்களில் நிலக்கடலை செடிகள் வாடியும், கருகியும் காணப்படுகிறது. சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. ஆள் பற்றாகுறை, கூலி உயர்வால், இயந்திர அறுவடைக்கு விவசாயிகள் மத்தியில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. பல ஆட்கள் செய்யும் வேலையை, இயந்திரங்கள் மூலம் செய்வதால், நேரம், பணமும் மீதமாகிறது.

நிலக்கடலை செடியில் இருந்து காய்களை மட்டும் தனியாக பிரித்தெடுக்கும் வகையில், எளிமையான இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டு, அறுவடை பணி நடக்கிறது.

கோபி அடுத்த கூகலூரை சேர்ந்த விவசாயி செந்தில்குமார் கூறியதாவது:

காஞ்சிக்கோவில் பகுதியை சேர்ந்த நண்பர் மூலம் இயந்திரத்தை வாங்கி, சோதனை அடிப்படையில் பயன்படுத்தி வருகிறேன். சாதாரண மாவு அறைக்கும் இயந்திரத்தில் உள்ள, சிறு மோட்டாரை பயன்படுத்தி, வீட்டு இணைப்பு மின்சாரத்தால் இயங்குகிறது. எட்டு கூலி ஆட்கள் சேர்ந்த ஒரு மணி நேரத்தில் ஒரு மூட்டை காய் பறிப்பர். இந்த இயந்திரம் மூலம் ஆறு ஆட்கள் மூலம், மூன்று மணி நேரத்தில் ஐந்து மூட்டை நிலக்கடலை செடியில் இருந்து காய் பிரித்துவிடலாம்.

ஆள் கூலி பாதி மீதமாகிறது. அறுவடை செய்யப்படும் நிலக்கடலை செடிகளை வயலில் இருந்து மொத்தமாக வீட்டுக்கே எடுத்து வந்து, ஆட்கள் கிடைப்பதை பொறுத்து கொஞ்சம், கொஞ்சமாக காய்களை பிரித்துக் கொள்வோம். இயந்திரத்தின் விலை, 15 ஆயிரம் ரூபாய். இயந்திரத்தை இன்னும் திருத்தியமைத்தால், அறுவடை பணி வேகமாக நடக்கும். மொத்தமாக இயந்திரம் தயாரிக்கும் போது விலையும், என்றார்.

இயந்திரத்தை நேரில் பார்வையிட்ட கோபி வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:

விவசாயி செந்தில்குமார், சொட்டு நீர் மூலம் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளார். கடுமையான வறட்சி நிலவும் இத்தருணத்தில் தெளிப்பு நீர்பாசன கருவியை பயன்படுத்தி, நல்ல மகசூல் பெற்றுள்ளார். நிலக்கடலை செடியில் இருந்து காயை பிரிக்க இயந்திரம் பயன்படுத்தி உள்ளார். இதன் மூலம் ஆட்கள், கூலி மீதமாவதுடன், தரமான விழுதுகள் இல்லாத காய்களும் கிடைக்கிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலும் இதுபோன்ற இயந்திரங்கள் வடிவமைக்கப்படுகின்றன, என்றார்.

## கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறப்பு

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்காக, கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டது.

சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இங்கிருந்து வரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம் ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தின் ஒரு பகுதியைச் சேர்ந்த, 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறுகிறது.

தற்போது, பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டதால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்தது. இதனால், பவானிசாகர் அணையின் நீர் மட்டம் குறையத்துவங்கியது.

இந்நிலையில், முறையாக பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மற்றும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் ஆகிய பாசனப்பகுதியில் தண்ணீர் திறக்க தட்டுப்பாடு ஏற்பட்டது.

இச்சூழலில், கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டுமென, விவசாய சங்கங்கள் சேர்ந்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தது.

இவ்வழக்கில், விவசாய அமைப்புகளை கலந்து பேசி, தண்ணீர் வழங்குவது குறித்து முடிவெடுக்க நீதிமன்றம், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து பேசி, பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்துக்காக நேற்று (14ம் தேதி) முதல் தண்ணீர் திறக்க முடிவு செய்து, நேற்று காலை, 8 மணிக்கு, விநாடிக்கு, 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. மதியம், 12 மணி அளவில், 1,000 கனஅடியாகவும், மாலை, 6 மணி அளவில், 1,500 கனஅடியாகவும் அதிகரிக்கப்பட்டது.

தற்போது, கீழ்பவானி பாசன வாய்க்கால் பகுதியில் இருபுறமும் கடும் வறட்சி ஏற்பட்டு, விவசாய கிணறுகளில் தண்ணீர் வற்றி, விவசாய பயிர்கள் வறண்டு போகும் நிலையிலும், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில் உள்ள நிலையில், கீழ்பவானியில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது, முக்கியமாக கருதப்படுகிறது.

## கேரளாவுக்கு அனுப்பப்பட்டதால்: ஈரோட்டில் பூவுக்கு கடும் கிராக்கி

ஈரோடு: சித்திரை திருநாள் பண்டிகை கொண்டாட்டத்துக்கு, தமிழகத்தில் உற்பத்தியான பூக்கள் கூடுதலாக கேரளாவுக்கு அனுப்பப்பட்டதால், ஈரோட்டுக்கு பூக்கள் வரத்து குறைந்து, கிராக்கி ஏற்பட்டது.

ஈரோடு நகரில் நாச்சியப்பா வீதி, அகில்மேடு சின்ன மார்க்கெட், நேதாஜி காய்கறி மார்க்கெட், பி.எஸ்.பார்க், ஈ.வி.என்., ரோடு ஆகிய இடங்களில், மொத்தம் மற்றும் சில்லறை விற்பனையில் பூக்கள் விற்பனை செய்யும் கடைகள் அமைந்துள்ளன.

சத்தியமங்கலம், கோபி, அந்தியூர், சேலம், திண்டுக்கல் ஆகிய இடங்களில் இருந்து, குண்டு மல்லி, கனகாம்பரம், செவ்வந்தி, சம்மங்கி, அரளி ஆகிய பூக்களும், மேட்டுப்பாளையம், ஊட்டி, நீலகிரி,

ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து பட்டன் ரோஸ், ஊட்டி ரோஸ், டேலியா பூ, டிசம்பர் பூ, சவுக் ஆகியவை விற்பனைக்கு வருகிறது.

நகரிலுள்ள கடைகளுக்கு தினமும், 4 டன் பூக்கள் விற்பனைக்கு வருகிறது. பண்டிகை, திருவிழா சமயங்களில் கூடுதல் பூக்கள் விற்பனை வருவது வழக்கம். நேற்றைய தினம், சித்திரை முதல் நாள், தமிழ்ப்புத்தாண்டு என்பதால் பூக்களின் தேவை அதிகமாக காணப்பட்டது.

மாவட்டத்தின் பல இடங்களில் இருந்து வந்த மக்கள், பூக்கடையில் குவிந்தனர். தேவை அதிகம் இருந்த போதிலும், வரத்து குறைந்ததால், விற்பனைக்கு பூக்கள் இன்றி கடைகள் காலியாகின.

இதுபற்றி பஸ் ஸ்டாண்ட் பூ வியாபாரி நாகராஜன் கூறியதாவது,

சித்திரை வருடப்பிறப்புக்கு பூக்கள் அதிகம் தேவை என்பதால், கூடுதலாக ஐந்து டன் பூக்களுக்கு ஆர்டர் செய்திருந்தோம். மழையின்மையால் உற்பத்தி குறைவு மற்றும் கேரளா மாநிலத்தவர், சித்திரை விஷூவுக்காக பூக்களை ஒட்டு மொத்தமாகவும், நேரடியாக கூடுதல் விலைக்கு வாங்கிச் சென்றதால், ஈரோட்டுக்கு பூக்கள் வரத்து நேற்று ஒன்றரை டன்னாக குறைந்தது.

வழக்கமான பூக்கடைகளுக்கு கூட பூக்கள் வழங்க முடியவில்லை.

இரண்டு மணி நேரத்தில் பூக்கள் விற்றுத்தீர்ந்தன. மொத்த விலையில் மல்லி கிலோ, 200 ரூபாய், சில்லறை விலையில், 320 ரூபாய், கனகாம்பரம் மொத்த விலை, 260 ரூபாய், சில்லறை விலையில், 400 ரூபாய், அரளி, 140 ரூபாய், சம்பங்கி, 340 ரூபாய், செவ்வந்தி, 160 ரூபாய், பட்டன் ரோஸ், 80 ரூபாய், கலர் ரோஸ், 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது, என்றார்.

## உழவர் பெருவிழா துவக்கம் இடுபொருட்கள் வழங்கல்

கோபிசெட்டிபாளையம்: டி.என்.பாளையத்தில் நடந்த உழவர் பெருவிழாவில் 10 விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து, 46 ஆயிரம் மதிப்பிலான விவசாய இடுபொருட்களை முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் வழங்கினார்.

டி.என்.பாளையம் வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா டி.என்.பாளையத்தில் நடந்தது.
விவசாய இடு பொருட்களை வழங்கி முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பேசியதாவது:
வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளை காப்பாற்ற தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் போதிய அளவு தண்ணீர் திறக்க முதல்வரிடம் கோரிக்கை வைக்க உள்ளோம்.

உழவர் பெருவிழாவில் வழங்கப்படும் கையேடுகள் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வகையான தகவல் தெரிந்து கொள்கின்றனர். இதுபோன்ற உழவர் பெருவிழாவை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், ஒரு லட்சத்து, 94 ஆயிரத்து, 476 ரூபாய் மதிப்பிலான பவர்

டில்லர், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில், 30 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ரொட்டாவேட்டர் உள்பட பல்வேறு பொருட்கள், 10 விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து, 46 ஆயிரத்து, 406 ரூபாய் மதிப்பில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.

உழவர் பெருவிழாவை முன்னிட்டு மஞ்சள் சாகுபடி, வாழை சாகுபடி குறித்த வேளாண் பொருட்கள் கண்காட்சி வைக்கப்பட்டு இருந்தன.

அந்தியூர் எம்.எல்.ஏ., ரமணீதரன், ஒன்றிய செயலாளர் மனோகரன், டி.என்.பாளையம் யூனியன் தலைவர் கந்தசாமி, வேளாண் துறை உதவி இயக்குனர் பாபு, அலுவலர் சரோஜா, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் பிரபு, அலுவலர் பொங்கியண்ணன், உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

## தேயிலை செடிகளுக்கு இயற்கை உரம் தயாரிப்பு தொட்டி அமைக்கும் பணியில் வெளிநாட்டினர்

கூடலூர்: கூடலூர் கவுண்டன்கொல்லி ஆதிவாசி மக்கள் இயற்கை உரம் தயாரித்து, தேயிலை செடிகளுக்கு பயன்படுத்தும் வகையில்,"மண்புழு' உரம் தயாரிக்கும் தொட்டிகள் அமைக்கும் பணியில் வெளிநாட்டினர் ஈடுபட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் தேவர்சோலை கவுண்டன்கொல்லி ஆதிவாசி கிராம மக்களிடம் 50 ஏக்கர் பரப்பளவில் தேயிலை தோட்டங்கள் உள்ளன. இதற்கு இயற்கை உரங்கள் மட்டும் பயன்படுத்தி மகசூல் பெறும் தேயிலை தோட்டமாக மாற்ற, கூடலூர் சி.டி.ஆர்.டி., அறக்கட்டளை,"ரேலி இன்டர்நேஷனல் சிட்டின் சர்வீஸ்' ஆகியோர் கூட்டாக முயற்சி மேற்கொண்டுள் ளனர்.

இதற்கான இயற்கை உரங்களை, அவர்களே தயாரிக்கும் வகையில், 45 வீடுகளுக்கு முன் "மண்புழு' உரம் தயாரிக்கும் தொட்டிகள் அமைக்கும் பணியில் நடந்து வருகிறது."இந்த பணியில் இங்கிலாந்தை சேர்ந்த 6 பேர், இந்தியாவை சேர்ந்த 6 பேர்' என மொத்தம் 12 தன்னார்வ தொண்டர்கள் அதே பகுதியில் தங்கி பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

தொட்டிகள் அமைக்கும் பணி நிறைவு பெறும் தருவாயில் உள்ளது. இதனை தொடர்ந்து, ஆதிவாசிகளுக்கு "மண்புழு' உரம் தயாரிப்பு குறித்து பயிற்சி அளித்து, இலவச மண்புழு வழங்க உள்ளனர். இயற்கை உரம் தயாரித்து பயன்படுத்துவதில் ஆதிவாசிகள் ஆர்வத்துடன் உள்ளனர். இது குறித்து சி.டி. ஆர்.டி., இயக்குனர் ரங்கநாதன் கூறுகையில், ""இங்குள்ள ஆதிவாசி மக்களிடம் உள்ள 50 ஏக்கர் பரப்பில் உள்ள தேயிலை தோட்டங்களுக்கு இயற்கை உரம் பயன் படுத்தி மாதிரி தோட்டமாக மாற்ற உள்ளோம்.

அவர்களுக்கு தேவையான இயற்கை உரங்களை அவர்களே தயாரிக்கும் வகையில், தலா 5,000 ரூபாய் செலவில், அப்பகுதியில் 45 வீடுகள் முன் மண்புழு உரம் தயாரிக்கும் தொட்டிகள் (யூனிட்)

அமைத்து வருகிறோம். அவர்கள் உற்பத்தி செய்யும் மண்புழு உரங்களை அவர்களின் தேயிலை தோட்டங்களுக்கு பயன்
படுத்த அறிவுறுத்தியுள்ளோம்.
ஆதிவாசிகளும் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இதன் பயன்பாட்டை தொடர்ந்து மற்ற கிராமங்களிலும், இத்திட்டம் செயல்படுத்த முயற்சிக்கப்படும்,'' என்றார்.

## உழவர் பெருவிழா நிகழ்ச்சிகள்

ஊட்டி:நீலகிரி மாவட்டத்தின் பல இடங்களில் நடந்த உழவர் பெருவிழாவில், ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.
நீலகிரி மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று உழவர் பெருவிழா துவங்கியது. ஊட்டி கெந்தொரை கிராமத்தில் நடந்த உழவர் பெருவிழாவுக்கு, நீலகிரி கூட்டுறவு துறைகளின் சார் பதிவாளர் வனிதா தலைமை வகித்தார்.தோட்டக்கலை உதவி இயக்குனர் மணி முன்னிலை வகித்தார்.
* கோத்தகிரி மிளிதேன் கிராமத்தில் நடந்த விழாவுக்கு, தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வரவேற்றார். ஊர் தலைவர் போஜன் தலைமை வகித்தார். முன்னாள் நெடுகுளா ஊராட்சி தலைவர் பில்லன் முன்னிலை வகித்தார். கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய தலைவர் (பொ) மணி மனோகரன் உட்பட பல அரசுத் துறை அலுவலர்கள், அந்தந்த துறை சார்பில் செயல்படுத்தும், திட்டங்கள் குறித்து பேசினர்.
* கூடலூர் புளியாம்பாறையில் நடந்த நிகழ்ச்சியில், கூடலூர் தோட்டகலை உதவி இயக்குனர் (பொ) ஜெயலட்சமி வரவேற்றார். ஊட்டி தோட்டக்கலை மண்பரிசோதனை மைய உதவி இயக்குனர் உமாராணி தலைமை வகித்தார். வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் சுப்ரமணியம் உட்பட அரசு துறை அதிகாரிகள் பலர் பேசினர். அரசின் விவசாய திட்டங்கள் குறித்த கலை நிகழ்ச்சிகள் நடந்தன. விழாவில், நெல்லியாளம் நகராட்சி தலைவர் அமிர்தலிங்கம், கவுன்சிலர் முருகையா உட்பட பலர் பங்கேற்றனர். உதவி விதை அலுவலர் ராமலிங்கம் நன்றி கூறினார்.
வலியுறுத்தப்பட்ட கருத்துக்கள்
விழாவில், விளை நிலங்களில் மண் பரிசோதனை செய்து, அதில் உள்ள ஊட்டச் சத்துக்கள், நுண் ஊட்ட சத்துகளின் அளவை கண்டறிந்து, அதற்கேற்ப உரமிட வேண்டும்; இடுப்பொருட்களின் விலையேற்றத்தை கருத்தில் கொண்டு, உற்பத்தி செய்யப்படும் விளை பொருட்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க வேண்டும்; காய்கறி விளைப் பொருட்களை நோயில் இருந்து காப்பாற்றி, மதிப்புக் கூட்டி அதிக விலைக்கு விற்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

## துவங்கியது மாம்பழ "சீஸன்' நல்ல விளைச்சலால் "குஷி'

திருச்சி: நல்ல விளைச்சலுடன் திருச்சியில் மாம்பழம் "சீஸன்' துவங்கி உள்ளதால், மாம்பழம் வியாபாரிகள், பிரியர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆண்டு தோறும் பங்குனி மாதம் கடைசியில் துவங்கும் மாம்பழம் "சீஸன்', சித்திரை, வைகாசி, ஆனி மாதம் வரை சிறப்பாக இருக்கும். ஆடி மாதம் துவக்கத்தில் குறைந்துவிடும். ஆனால், கடந்த சில ஆண்டாக மாம்பழம் விளைச்சல் குறைவு, சாகுபடி பரப்பளவு குறைவு, நுகர்வு அதிகரிப்பு, மாங்கூழ், குளிர்பானம் தயாரிக்கும் நிறுவனங்களின் கொள்முதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், மாம்பழம் விலை உயர்ந்து வருவதோடு, மாம்பழம் கிடைப்பதும் தட்டுப்பாடாக உள்ளது.

திருச்சியை பொறுத்தவரை, ஸ்ரீரங்கம் மேலூரிலிருந்து, கல்லணை வரையிலும், துவரங்குறிச்சி, நத்தம் ஆகிய பகுதிகளில் அதிகளவு "மா'ந்தோப்புகள் உள்ளன.

குறிப்பாக, ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் தாத்தச்சாரியார் கார்டனில் விளையும் இமாம்பசந்த் மாம்பழத்துக்கு நல்ல "மவுசு' உள்ளது. கடந்தாண்டு "மா' சீஸன் துவக்கத்தில் பெய்த திடீர் மழை மற்றும் புயலால் பெரும்பாலான இடங்களில் பூக்கள் கொட்டி, மா விளைச்சல் பாதித்தது. இதனால் விலை அதிகமானது.

நடப்பாண்டு மழை, சூறாவளி போன்ற பாதிப்பு இல்லை. இதனால், மாம்பழம் "சீஸன்' துவக்கத்தில், நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. கடந்தாண்டை காட்டிலும், 10 சதவீதம் கூடுதல் வரத்து உள்ளதாக கடை வியாபாரிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து ஸ்ரீரங்கம் மாம்பழம் வியாபாரி ஒருவர் கூறியதாவது:

நடப்பாண்டு துவக்கத்தில், மாம்பழம் வரத்து, 10 சதவீதம் அதிகரித்துள்ளது. 15 நாள் கோடை மழை பெய்தால் நல்ல காய்ப்பு கிடைக்கும். அடைமழையோ, புயலோ வீசினால் பூக்கள் கொட்டி விடும். அதேபோல, இன்னும் 20 நாள் கழித்து மழை பெய்தால், அனைத்து மாங்காயும் ஒன்று சேர்ந்தார்போல பழுத்துவிடும். விலை திடீரென சரியும். பின்னர், விலை அதிகரிக்கும். வெளிநாடுகளுக்கு செல்வோர் அதிகளவு மாம்பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வாழைத்தார் விலை வீழ்ச்சியால் கடும் அதிர்ச்சியில் விவசாயிகள்

லாலாப்பேட்டை: வறட்சியில் போராடி காப்பாற்றி வாழைத்தார்கள், கடும் விலைவீழ்ச்சி காரணமாக, விவசாயிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதியின், பெரும்பாலான மக்கள்

விவசாயத்தையே சார்ந்து உள்ளனர். இங்கு லாலாப்பேட்டை, வல்லம், புதுப்பட்டி, மகாதானபுரம், பிள்ளபாளையம், கருப்பத்தூர், ஆகிய பகுதிகளில், 5,000 ஏக்கர் சாகுபடி நடக்கிறது. இதில் கடந்த, 11 மாதங்களுக்கு முன் வாழை பயிரிடப்பட்டுள்ளது.
காவிரி பாசன நீர் ஆதாரத்தை கொண்டு விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது காவிரி ஆறு வறண்டு போனதால், வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்ச வழி இல்லாமால் போனது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் போர்வெல்கள் அமைத்தும், தண்ணீரை விலைக்கு வாங்கியும் பயிர்களை காப்பாற்றி வருகின்றனர்.
தற்போது சுட்டெரிக்கும் வெயில், கடுமையான மின் தட்டுப்பாடு மற்றும் வறட்சி காரணமாக, பெரும்பாலான இடங்களில் வாழை மரங்களில் வளர்ந்திருந்த வாழைத்தார்கள் கருக துவங்கின. இதன் காரணமாக அறுவடை காலத்துக்கு முன்பே, அவசர, அவரசமாக வாழைத்தார்களை விவசாயிகள் வெட்டி வருகின்றனர்.
இவ்வாறு வெட்டப்படும் வாழைத்தார்களை, சந்தைக்கு கொண்டு போனால், அங்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். ஒரே சமயத்தில் வாழைத்தார் அதிகளவில் அறுடை செய்யப்படுவதால், மார்க்கெட்டில் வாழைத்தார் விலை கடும் வீழ்ச்சியடைந்து வருகிறது. இதுகுறித்து அப்பகுதி விவசாயி ஒருவர் கூறியதாவது:
கடந்த மாதம், 350 ரூபாய்க்கு விற்பனையான ரஸ்தாளி ஒரு தார், தற்போது, 250 ரூபாய், 400 ரூபாய் விற்ற பூவன் தார், 200 ரூபாய், 250 விற்பனையான கற்பூரவள்ளி தார், 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.
கடும் போராட்டத்துக்கு பின் அறுவடை செய்த வாழைத்தாரின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. வறட்சியால் சாகுபடி செலவு, 60 ஆயிரம் ரூபாய்க்கு மேல் அதிகரித்துள்ளது. ஆனால் விலை குறைவாக இருப்பதால், "போட்ட காசாவது மிஞ்சுமா?' என்ற அச்சம், விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.
தொடர்ந்து வரத்து அதிகரித்து வருவதால், வாழைத்தாரின் விலை இன்னும் குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபரிகள் கூறுகின்றனர். வறட்சியால் மிரண்டு போயுள்ள விவசாயிகளுக்கு, வாழைத்தாரின் விலை வீழ்ச்சி பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

### காளான் வளர்ப்பு சிறப்பு பயிற்சி நாளை நடப்பு: வம்பன் ஏற்பாடு

புதுக்கோட்டை: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், காளான் வளர்ப்பு குறித்த சிறப்பு பயிற்சி முகாம் நாளை நடக்கிறது.
புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கு பயிர் சாகுபடியில் மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து, அவ்வப்போது பயிற்சிகள்

வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக காளான் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் வைரவன் வெளியிட்டுள்ள அறிக்கை: காளான் சத்துகள் நிறைந்த உணவு மட்டுமின்றி, நோய்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் படைத்தது என்பதால், இதற்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு உள்ளது. இயற்கையாகவே கிடைக்கும் அரியவகை உணவு வகைகளில் காளானும் ஒன்று. இதை சுவைமிக்க உணவாக தயார் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

காளான்களில் நார்ச்சத்து, புரதச்சத்து அதிகமாகவும், மாவுச்சத்து, கொழுப்புச்சத்து குறைவாகவும் இருப்பதால் அனைவரும் விரும்பி உண்கின்றனர். மனிதர்களுக்கு தேவையான அமினோ அமிலம் உள்ளதால் இரத்த அழுத்தம், இரத்த சோகை, சர்க்கரை நோய் போன்றவற்றை கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கது.

காளான் வகைகளில் மொட்டுக் காளான், சிப்பிக் காளான், வைக்கோல் காளான், பால் காளான் போன்றவை வளர்ப்பதற்கும், வணிகத்துக்கு ஏற்றவையாக உள்ளது. இவ்வகையான காளான் வளர்ப்பை முழுநேர தொழிலாகவும், பகுதிநேர தொழிலாகவும் செய்யலாம். காளான்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்து வருவதால், இவற்றின் தேவையும் அதிகரித்துவருகிறது. இதன்காரணமாக காளான் வளர்ப்பு லாபகரமான தொழிலாக அமைந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதர பயிர் சாகுபடியைப் போன்று, காளான் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக விவசாயிகளுக்கு பயற்சி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வளர்ப்பதற்கான காளான்களை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள், நவீன தொழில் நுட்பங்களை பின்பற்றி சாகுபடி செய்வதன் மூலம், உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து, வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர்.

காளான் வளர்க்க விரும்பும் விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், நாளை காலை, பத்து மணிக்கு நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் பங்கேற்கலாம்.

## விவசாய விழிப்புணர்வு ரதம்: கலெக்டர், எம்.எல்.ஏ., துவக்கம்

தஞ்சாவூர்: விவசாய தொழில்நுட்பம் குறித்து விளக்கும் வகையில், 14 ஒன்றியங்களுக்கு தலா, ஒரு விழிப்புணர்வு ரதத்தை, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன், எம்.எல்.ஏ., ரங்கசாமி துவக்கி வைத்தனர். தஞ்சை கலெக்டர் அலுவலக வளாகத்தில் உழவர் பெருவிழா, விழிப்புணர்வு ரதம் பயணம் துவக்க விழா நடந்தது. தொடர்ந்து நடந்த விழாவில், வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு நல உதவிகளை கலெக்டர் பாஸ்கரன் வழங்கி பேசியதாவது:

தமிழகத்தில் விவசாயிகள் நலன்களை பாதுகாக்கும் வகையில், வேளாண்துறையில் உயர்

தொழில்நுட்பங்களை விளக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ரத பயணம், கருத்தரங்குகள் நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதன்படி, உழவர் பெருவிழா எனும் பெயரில் கடந்த, இரண்டு ஆண்டுகளாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி நடந்து வருகிறது.
உழவர் பெருவிழா இன்று முதல், அடுத்த மாதம், 20ம் தேதி வரை நடத்தப்படும். இதில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்யப்படும்.
தஞ்சை மாவட்டத்தில் கடந்த, இரண்டு ஆண்டுகளில், 24 கிராமங்களில், 1,200 பயனாளிகளுக்கு இலவச கறவை பசுக்கள், 219 கிராமங்களில், பத்தாயிரத்து, 733 பயனாளிகளுக்கு வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகள் வழங்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் தினமும், நான்காயிரம் லிட்டர் பால் ஆவின் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.
இதுதவிர ஆடுகள் ஈன்ற, 6,739 குட்டிகள், தொடர்ந்து நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் வெள்ளாடு, கறவை பசு வழங்கும் திட்டத்தில், சிறந்த முறையில், கால்நடைகளை பராமரிக்கும், 20 பேருக்கு தலா, 19 ஆயிரம், 19 ஆயிரத்து, 500 ரூபாய் மதிப்பில், இரு வகையாக தீவனம் பரிசாக வழங்கப்படுகிறது.
இவ்வாறு கலெக்டர் பேசினார்.
நிகழ்ச்சியில் தஞ்சை எம்.எல்.ஏ., ரங்கசாமி, நகராட்சி தலைவர் சாவித்திரி, வேளாண்மைத்துறை இணை இயக்குனர் முகமது யாகியா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.
தொடர்ந்து தஞ்சையிலுள்ள, 14 ஒன்றியங்களுக்கும், தலா ஒரு விழிப்புணர்வு ரத வாகனம் பயணத்தை துவங்கியது.
விழிப்புணர்வு வாகனத்தில், திருந்திய நெல் சாகுபடி முறைகள், உயர் தொழில்நுட்ப முறைகள், நவீன வேளாண்மை கருவிகள் பயன்பாடு குறித்த மாதிரிகள் வைக்கப்பட்டு, செயல் விளக்கத்தை கிராமம்தோறும் நிபுணர்கள் அளிக்கின்றனர் என, வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறினர்.

## தொடரும்! காவிரி உரிமையை மீட்க போராட்டம்... தமிழக விவசாயிகள் சங்கம் தீர்மானம்

தஞ்சாவூர்: ""காவிரியில் தமிழகத்தின் பங்களிப்பு நீரையும், உரிமையையும் மீட்டெடுக்கும் வகையில், தொடர்ந்து, தமிழக விவசாயிகள் சங்கம் போராட்டங்களை நடத்தும்," என அச்சங்கத்தின் மாநில தலைவர் சிவசாமி கூறினார்.
தஞ்சை பெசன்ட் ஹோட்டல் வளாகத்தில், தமிழக விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இதில் மாநிலத்தலைவர் சிவசாமி தலைமை வகித்தார். மாவட்டத்தலைவர் சுகுமாரன், செயலாளர் சக்திவேல் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் வைத்திலிங்கம், நிர்வாகிகள் சொக்கையா, கண்ணன், ஜானகிராமன், புகழேந்தி, யுவராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.
கூட்டத்தில், நடப்பாண்டு காவிரி நீர் கர்நாடகா மாநிலத்திலிருந்து பெற முடியாத சூழலில்,

டெல்டா மாவட்டங்களில், பம்ப்செட் மூலம் நெல் சாகுபடி மேற்கொள்ள, 20 மணி நேரம் மும்முனை மின்சாரத்தை தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கி வந்தது. சம்பா பயிர் சாகுபடிக்கு, 12 மணி நேரம் மின்வினியோகம் செய்யப்பட்டது.

தற்போது தஞ்சை மாவட்டத்தில், 50 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கோடை நெல்சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இப்பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகின்றன. இதை காக்கும் வகையில், 12 மணி நேரம் மும்முனை மின்சாரத்தை அரசு வழங்க வேண்டும்.

நெற்பயிர் உற்பத்தியில் செலவு அதிகளவில் ஏற்பட்டு வருகிறது. இதை தாக்குப்பிடிக்க முடியாமலும், விளைவித்த பயிர் அடியோடு கருகி நாசம் அடைவதாலும், விவசாயிகள் மனமுடைந்து தற்கொலை செய்யும் நிலை ஏற்பட்டது.

இதற்கு பொறுப்பேற்று, பயிர் நிவாரண இழப்பீட்டு தொகையை மத்திய, மாநில அரசு இணைந்து சமமாக பங்கிட்டு, விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

இதன்படி ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். முதற்கட்டமாக இதை இன்னும், ஒருமாத காலத்தில் தமிழக அரசு, விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்க வேண்டும். இதற்கு, 700 கோடி ரூபாய் மட்டுமே செலவாகும். மீதமுள்ள, 10 ஆயிரம் ரூபாயை மத்திய அரசு வழங்கும்படி, விவசாயிகள் போராட்டம் நடத்தி பெறுவோம்.

தஞ்சை மாவட்டத்தில், 12 ஏக்கர் நெற்பயிர் தான் காவிரி நீரின்றி வறட்சியால் பாதித்துள்ளது என, தஞ்சை மாவட்ட நிர்வாகம், அரசுக்கு தவறான கணக்கை கொடுத்துள்ளது. இப்போக்கு கண்டிக்கத்தக்கது. இதற்காக மாவட்ட நிர்வாகம் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவிரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டாலும், இதை கர்நாடகா அரசு மதிப்பதாக தெரியவில்லை. எனவே, காவிரியில் தமிழகத்தின் உரிமையை பெற, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும். இதுபோன்ற பிரச்னைகளை தவிர்க்க நதிகளை மத்திய அரசு தேசியமயமாக்க வேண்டும்.

நெல்விலை குவிண்டாலுக்கு, இரண்டாயிரம் ரூபாய், கரும்பு விலை டன்னுக்கு, 3,500 ரூபாய் என, கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டும். வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதால், கூட்டுறவு கடன்களை தமிழக அரசும், தேசிய வங்கி கடன்களை மத்திய அரசும் தள்ளுபடி செய்ய வேண்டும். உரத்தை, 50 சதவீதம் மானியத்தில் கூட்டுறவு சங்கம் மூலம் வினியோகிக்க வேண்டும்.

தொடர்ந்து, பகலில், 12 மணி நேரமும் மும்முனை மின்சாரம், ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கக்கோரி ஒரத்தநாட்டில் விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்பது உள்பட, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## உழவர் பெருவிழா எம்.எல்.ஏ., துவக்கம்

வேதாரண்யம்: வேதை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உழவர் பெருவிழா விழிப்புணர்வு ரதத்தை, எம்.எல்.ஏ., காமராஜ் துவக்கி வைத்தார்.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தில், நகராட்சிக்கு உள்பட்ட ராமகிருஷ்ணா புரத்திலுள்ள ராமகிருஷ்ணா சமுதாய கூடத்தில், உழவர் பெருவிழா நேற்று துவங்கியது. இதில், வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரஹாசன் தலைமை வகித்தார். வேளாண்மைத்துறை துணை அலுவலர் ராமதிலகம் வரவேற்றார்.

நகராட்சி தலைவர் மலர்க்கொடி, பஞ்., யூனியன் தலைவர் சுசீலாதேவி முன்னிலை வகித்தனர். உழவர் பெருவிழா குறித்த விழிப்புணர்வு ரதத்தை, எம்.எல்.ஏ., காமராஜ் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் சிவானந்தம், மாவட்ட பஞ்., கவுன்சிலர் சண்முகராசு உள்பட நிர்வாகிகள், வேளாண்மைத்துறை அதிகாரிகள், அலுவலர்கள் பலர் பங்கேற்றனர். முடிவில், உதவி அலுவலர் வேதரத்தினம் நன்றி கூறினார்.

## மரவள்ளி கிழங்கு விலை விவசாயிகள் மகிழ்ச்சி

தேவாரம்:தேவாரம் பகுதியில் விளையும் மரவள்ளி கிழங்கிற்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தேவாரம், டி.மீனாட்சிபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கரில் மரவள்ளி கிழங்கு சாகுபடி நடக்கிறது. ஓராண்டு பயிரான மரவள்ளி சாகுபடிக்கு குறைந்த பராமரிப்பு செலவு, கூலியாட்களின் குறைவான தேவை, கிழங்கு வாங்குபவர்களே தோண்டி எடுத்து செல்வதால், விவசாயிகள் ஆர்வமாக பயிரிட்டனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக விலை கிடைக்காத நிலையில், இந்த ஆண்டு மரவள்ளி கிழங்கின் விலை உச்சத்தில் உள்ளது. ஒரு டன் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.மரவள்ளி கிழங்கு கமிஷன் மண்டி உரிமையாளர் தங்கப்பாண்டி கூறியதாவது: சேலம் பகுதியில் செயல்படும் ஜவ்வரிசி ஆலைக்காரர்களின் விருப்பம் போல இப்பகுதி கிழங்கு, பிழிவு திறனோடு உள்ளது. 22 முதல் 28 பாயின்ட் "ஸ்டார்ச்' கிடைப்பதால், நல்ல விலை கிடைக்கிறது. கேரள மக்கள் விரும்பி உண்ணும், வாட்டு கப்பை கிழங்கில் இருந்து "சிப்ஸ்' தயாரிக்கும் பணியில், இப்பகுதியில் நூற்றுக்கணக்கான பெண்கள் ஈடுபட்டு நல்ல லாபம் பார்க்கின்றனர், என்றார்'.

## தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் : விவசாயிகள் கவலை

தென்காசி:தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும் சிறிய ரக டிராக்டருக்கு தனியாக பணம் கேட்டு ரொட்டவேட்டர்கள் வழங்காமல்

காலம் தாழ்த்துவதால் டிராக்டர்களை மீண்டும் மாவட்ட கலெக்டரிடம் ஒப்படைக்க விவசாயிகள் முடிவுசெய்துள்ளனர்.இயற்கை நமக்கு அளித்துள்ள அரிய வளங்களான நிலம் மற்றும் நீரை பாதுகாத்தல், பராமரிதர்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகளை வேளாண்மை பொறியியல் துறை மூலம் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் முக்கிய நோக்கமே வேளாண்மையை இயந்திரமயமாக்குதல் மண் மற்றும் நீர் வளங்களை பாதுகாத்தல் மற்றும் பாசன நீர் மேலாண்மை ஆகும். வேளாண்மையில் நவீன இயந்திரங்களை அறிமுகப்படுத்தி அவற்றை பிரபலப்படுத்துவதன் மூலமாக கூடுதலாக பண்ணை சக்தி வழங்கிடவும், வேளாண்மை தொழிலாளர் பற்றாக்குறையை போக்கிடவும், வேளாண் பணிகளை உரிய காலத்தில் செய்து முடித்திடவும், வேளாண் உற்பத்தியை பெருக்கிடவும், வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகின்றது.விவசாயிகள் மத்தியில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் செயல்விளக்கம் விவசாயிகளின் நிலங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் உலக வங்கி நிதியுடன் செயல் படுத்தப்படும் நீர்வள நிலவளத்திட்டம், சொட்டுநீர் பாசானம், தெளிப்பு நீர் பாசானம், பண்ணை குட்டைகள் அமைத்தல், தகவல்பரிமாற்றம் மற்றும் பயிற்சிகள் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும், வேளாண்மையை இயந்திர மயமாக்கும் திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வேளான்கருவிகள் வழங்குதல், மாநில அரசு செயல்பத்தும் வேளாண்மையை இயந்திரமயமாக்கும் திட்டம், நில மேம்பாட்டுத்திட்டம், சிறுபாசனதிட்டம், செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம், மழை நீர் சேகரிப்பு மற்றும் வழிந்தோடும் மழைநீர் மேலாண்மைத்திட்டம், மேற்குத்தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் செயல் விளக்கம் பயிற்சி உள்ளிட்ட பல திட்டங்கள் வேளாண்மை பொறியியல்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இந்த திட்டமானது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 3 உபகோட்ட அலுவலகங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.இதன்படி தென்காசி உப கோட்ட அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளான செங்கோட்டை, தென்காசி, சிவகிரி, வி.கே.புதூர் ஆகிய தாலகாக்களிலும், செங்கோட்டை, தென்காசி, கடையநல்லூர், வாசுதேவநல்லூர், கீழப்பாவூர், ஆலங்குளம் ஆகிய யூனியன் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகின்றது. இந்நிலையில் மாநில அரசு செயல்படுத்தும் வேளாண்மையை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு டிராக்டர், பவர் டில்லர், ரொட்டவேட்டர்கள் மானிய விலையில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்படி மானிய விலையில் வேளாண் கருவிகள் கோரும் விவசாயிகள் விண்ணபப்த்துடன்இணைக்க வேண்டிய இணைப்புகளுடன் அந்தந்தப் பகுதி உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் விண்ணபப்பிக்கவேண்டும்.
விண்ணப்பதாரர்களின் மூதுரிமைக்கு இணங்க அலவலகத்திலிருந்து தகவல் கிடைக்கப்பெற்ற

பின் தங்களுக்குத்தேவையான கருவியின் விலைப்புள்ளியை விருப்பப்பட்ட அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடமிருந்து பெற்று பயனாளிகளின் பங்களிப்பு தொகையை வங்கி வரைவோலையுடன் அலுவலகத்தில் கொடுக்கவேண்டும். பொருள் வழங்கல் ஆணை வழங்கியபின் நிறுவனத்தாரிடமிருந்து கருவிகள் பெறப்பட்ட பின் அலவலகம் மூலம் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வேளாண் கருவிகள் வழங்கப்படும்.ஆனால் பெரும்பான்மையான விவசாயிகள் இத்தகைய திட்டத்தில் சிறிய டிராக்டர்களை வாங்க விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒரு கம்பெனியின் சிறிய ரக டிராக்டர்களை வாங்க விண்ணப்பித்துள்ளனர். இதனுடைய செயல்பாடுகளில் திருப்தி அடைந்த விவசாயிகள் அந்த கம்பெனியை தெரிவு செய்தள்ளதாக கருத்து தெரிவித்துள்ளனர். இந்நிலையில் விண்ணப்பித்தவர்களுக்கு மூதுரிமைக்கு இணங்க முறையாக அலுவலகத்திலிருந்து எந்த விதமான தகவலும் தெரிவிக்கப்படவில்லை. பின்னர் வேளாண் இயந்திரம் தனக்கு வேண்டும் என்பதால் விவசாயிகளும் விற்பனையாளர்களிடமிருந்து விலைப்புள்ளியை வாங்கி தங்களின் பங்களிப்பு தொகையையும் வங்கி வரைவோலையையும் இணைத்து உதவி செயற்பொறியாளர் அலவலகத்தில் செலுத்திய நிலையல் விற்பனையாளரிடமிருந்து இயந்திரத்தை வாங்க காத்து கிடந்தனர்.இந்நிலையில் விற்பனையாளரோ டிராக்டருக்கு விலை உயர்ந்துவிட்டது, லாரி வாடகை உயர்ந்துவிட்டது என்பன உள்ளிட்ட காரணத்தைக் கூறி கூடுதலாக பல ஆயிரம் ரூபாய் கேட்டுள்ளார். ஆனால் பொருள் வேண்டும் என்பதற்காக சில பாமர விவசாயிகள் இந்த வார்த்தையை நம்பி பணம் கொடுத்து டிராக்டர்களை பெற்றுக்கொண்டனர். ஆனால் ஒரு சிலர் ஏண் பணம் தரவேண்டும், கொடுக்கும் பணத்திற்கு ரசீது கிடைக்குமா என்று கேட்ட பொழுது அதெல்லாம் தர முடியாது எனக்கூறி ரொட்டவேட்டர்கள் இணைக்கப்படாத டிராக்டர்களை வழங்கி உள்ளனர். இந்த நிலையில் கடந்த 2012-2013ம் நிதியாண்டின் முடிவில் விண்ணப்பித்தவர்களுக்கு பொருட்கள் வழங்க வேண்டும் என்பதற்காக கடந்த 1ம் தேதி காலையில் தென்காசி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வைத்து ரொட்டவேட்டர்கள் இணைக்கப்படாத டிராக்டர்களை உதவி செயற்பொறியாளர் வழங்கி புகைப்படமும் எடத்துக்கொண்டுள்ளனர்.டிராக்டர்களை வழங்கியதோடு சரி அதற்கு பில், இன்‹ரன்ஸ் ரசீது, டிராக்டரை போக்குவரத்து துறையினரால் பதிவு செய்யப்பட்டதற்கான ரசீதுகளை வழங்கவில்லை. தொடர்ந்து பல நாட்களாக புதிய டிராக்டர்கள் பல காட்சிப்பொருட்களாக விவசாயிகளின் வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். எனவே டிராக்டர் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கு ரொட்டவேட்டர்கள் வழங்கி விவசாயிகள் பயனடைய சம்பந்தப்பட்ட துறையினர் முன்வரவேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை மட்டுமல்ல ஆதங்களும் கூட....

தினகரன்

## அதிகரிக்கும் வெப்பநிலையால்

## மாறிவரும் சீதோஷ்ணநிலைக்கேற்ப பயிர் சாகுபடி செய்வது அவசியம்



ஈரோடு : உலக வெப்பமயமாதல் காரணமாக ஆண்டுதோறும் சமவெளிப்பகுதிகளில் மட்டுமின்றி மலைப்பகுதிகளிலும் சீதோஷ்ணநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் வெப்பத்தின் சராசரி அளவு அதிகரித்து வருவதால் விளையும் பொருட்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகிறது. பீட்ரூட், முட்டைகோஸ், முள்ளங்கி போன்ற பயிர்கள் மலைப்பாங்கான பகுதிகளில் மட்டுமே விளையும் என்ற நிலை இருந்தது. அதேபோல மலைப்பகுதிகளில் நெல், தென்னை போன்றவை விளையாது. தற்போது புவி வெப்பமயமாதல் காரணமாக மலைப்பகுதிகளில், சமவெளியில் விளையும் பயிர்கள் சாகு படி துவங்கியுள்ளது. அதேபோல சமவெளிப்பகுதியில் மலைக்காய்கறிகள் விளைய துவங்கியுள்ளன.

எனவே மாறி வரும் சீதோஷ்ணநிலைக்கு ஏற்ப மண்ணின் வளத்திற்கேற்ப, எந்தந்த பயிர்களை சாகுபடி செய்வது என்பது குறித்தும், எந்த உரத்தை இட வேண்டும், பயிரின் தன்மைக்கேற்ப வேளாண் தொழில் மேற்கொள்வது எப்படி என்பது குறித்தும் இந்திய அளவில் ஆய்வுகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக நார்வே நாட்டு உயர்மட்ட நிபுணர்கள் குழு இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. டாக்டர் உதயசேகர் தலைமையிலான 5 பேர் இடம் பெற்றுள்ள இந்த குழுவினர் தமிழகத்தில் திருச்சி மணப்பாறை பொன்னை ஆறு பாயும் பகுதியிலும், ஈரோடு மாவட்டம் காலிங்கராயன் வாய்க்கால் பகுதியிலும் ஆய்வு செய்து வருகின்றனர். காலிங்கராயன் வாய்க் கால் பகுதியில், ஆண்டுதோறும் அதிகரித்து வரும் வெப்பநிலையின் அளவு, மாறி வரும் சீதோஷ்ண நிலை, மண்ணின் தன்மை, தற்போது இடப்பட்டு வரும் உரங்களின் அளவு குறித்து ஆய்வு செய்தனர்.

ஆய்வு குறித்து உயர்மட்டக்குழு நிபுணர்கள் கூறியதாவது: உலக வெப்பமயமாதல் காரணமாக வளரும் நாடுகளும், வளர்ந்த நாடுகளும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஐரோப்பாவிலுள்ள வளர்ந்த நாடுகளை பொறுத்தவரை 'கிளைம் அடாப்ட்' எனப்படும் சீதோஷ்ண மாற்றம் தொடர்பான விஷயங்களில் அக்கறை செலுத்துவதால் அங்கு மாறி வரும் சீதோஷ்ணத்திற்கேற்ப என்னென்ன பயிர்களை சாகுபடி செய்யலாம் என ஆய்வு மேற்கொண்டு தெளிவான முடிவுக்கு வர முடிந்துள்ளது. ஆனால் வளர்ந்து வரும் நாடுகளில் இதுதொடர்பான விழிப்புணர்வு இல்லை.

இந்தியா போன்ற நாடுகளில் நாள்தோறும் மாறிவரும் சீதோஷ்ணநிலையால் முன்பிருந்ததை விட பயிர்களின் விளைச் சல் கணிசமாக குறையவே வாய்ப்புள்ளது. வெப்பநிலை உயர்வால் ஏற்படும் பாதிப்பிலிருந்து தப்புவது குறித்தும்,

நிலம், நீர், பயிர்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்தும் 'பயோ ஸ்போர் விங்' மூலம் நாங்கள் மேற்கொண்டுள்ள ஆய்வுகளின் முடிவுகள் குறித்து தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும், வேளாண் துறைக்கும் அறிக்கை தாக்கல் செய்வோம். சீதோஷ்ண மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதற்கான ஆலோசனைகளையும் வழங்குவோம். இவ்வாறு நார்வே நாட்டின் நிபுணர் குழுவினர் தெரிவித்தனர்.

## பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசன வாய்க்காலில் 1,500 கனஅடி தண்ணீர் திறப்பு

ஈரோடு, : கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்திற்கு முதல்கட்டமாக நேற்று காலை 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக அதிகரித்து நேற்று மாலை 1,500 கனஅடி

தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பவானிசாகர் அணையில் இருந்து வரும் கீழ்பவானி வாய்க்காலில் நன்செய் மற்றும் புன்செய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு கடுமையான வறட்சி காரணமாக அணையின் நீர்மட்டம் குறைந்து போனதால் தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு மட்டும் ஒருபோக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

கீழ்பவானி பாசன வாய்க்காலில் தண்ணீர் திறக்காததால் குடிநீருக்கு பாதிப்புகள் ஏற்பட்டு வந்தது. கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறக்க உத்தரவிடப்பட்டது. 11 நாட்களுக்கு கீழ்பவானி பாசன பகுதிக்கு தண்ணீர் திறக்க முடிவு நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர் மதியம் 12 மணிக்கு ஆயிரம் கனஅடியும், மாலை 6 மணிக்கு 1,500 கனஅடி நீரும் திறக்கப்பட்டுள்ளது. தற்போது திறக்கப்பட்டுள்ள நீரின் அளவை அதிகரித்து 2 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து பொதுப்பணித்துறையினர் கூறும்போது, '11 நாட்களுக்கு கீழ்பவானிக்கு தண்ணீர் திறந்து விட்ட பிறகு மீண்டும் பவானி ஆற்றில் 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க திட்டமிட்டுள்ளோம். இதனால் அணையில் உள்ள நீரின் இருப்பு வெகுவாக குறைய வாய்ப்புள்ளது' என்றனர்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் நலச்சங்கத்தின் தலைவர் நல்லசாமி தெரிவித்துள்ளதாவது: கீழ்பவானி பாசன பகுதியில் கடுமையான வறட்சியால் பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தென்னை மரங்கள் தண்ணீர் இன்றி பட்டுப்போய் காணப்படுகிறது. இந்நிலையில், கீழ்பவானி பாசனத்தில் ஒரு பகுதிக்கு ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கருக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் 11 நாட்களுக்கு வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் திறக்கப்படவுள்ளது. இதனால் தலைமை கால்வாய், பகிர்வு கால்வாய்களை ஒட்டியுள்ள திறந்தவெளி கிணறுகளுக்கும், ஆழ்குழாய் கிணறுகளுக்கும் ஓரளவிற்கு நீரூற்று கிடைக்கும். தற்போது திறக்கப்பட்டுள்ள தண்ணீர் கடைக்கோடி வரை செல்ல வேண்டி உள்ளதால் விவசாயிகளும், பாசன பகுதியைச் சேர்ந்தவர்களும் பொதுப்பணித்துறைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

இவ்வாறு நல்லசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

## 2500 மஞ்சள் விவசாயிகளுக்கு கடன் பெற்றுத்தர இலக்கு

ஈரோடு, : மஞ்சள் விவசாயிகளுக்கு பொருளீட்டு கடன் வழங்கும் விழா பள்ளிபாளையத்தில் உள்ள கார்பபரேஷன் வங்கியில் நடந்தது. ஈஸ்வரமூர்த்தி வரவேற்றார். இதில், ஈரோடு எம்.பி., கணேசமூர்த்தி பேசினார். பள்ளிபாளையம் கார்ப்பரேஷன் வங்கியின் மேலாளர் நாகராஜன் 7 மஞ்சள் விவசாயிகளுக்கு 35 லட்சம் ரூபாயை பொருளீட்டு கடனாக வழங்கினார்.

இதில் இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி, தமிழ்நாடு மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் காசியண்ணன், செயலாளர் நஞ்சப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கார்ப்பரேஷன் வங்கி பொருளீட்டு கடனுக்கு 10.25 சதவீதம் வட்டி வசூலிக்கிறது.

இதன் மூலமாக விவசாயிகளின் இருப்பு வைக்கும் சக்தி அதிகரிக்கும். தமிழகத்தில் ஈரோடு, மராட்டிய மாநிலததில் சாங்லி, ஆந்திராவில் நிஜாமதாபாத், கடப்பா ஆகிய பகுதிகளில் விவசாயிகளுக்கு கார்ப்பரேஷன் வங்கி மூலமாக பொருளீட்டு கடனை இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் பெற்றுக் கொடுத்துள்ளது. வரும் மே மாதத்திற்கு 2,500 விவசாயிகளுக்கு பொருளீட்டு கடன் பெற்று தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## காஞ்சீபுரம் மாவட்டத்தில் 1137 கிராமங்களில் உழவர் பெருவிழா

காஞ்சீபுரம்,

காஞ்சீபுரம் மாவட்டத்தில் 1137 கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெறுகிறது. இந்த விழாவை அமைச்சர் சின்னையா தொடங்கி வைத்தார்.

உழவர் பெருவிழா

காஞ்சீபுரம் மாவட்டத்தில் உழவர் பெருவிழா நடத்துவது குறித்த கண்காணிப்புக்குழு ஆலோசனை கூட்டம் காஞ்சீபுரத்தில் நேற்று நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக தமிழக அரசின் கூடுதல் செயலாளர் முருகையா கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், ''காஞ்சீபுரம் மாவட்டத்தில் 1137 கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெறும்'' என்றார். கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் லி.சித்திரசேனன், மாவட்ட திட்ட அதிகாரி அருள்ஜோதி அரசன், வேளாண்மை இணை இயக்குனர் சவுந்தரராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடக்க விழா

அதன்படி காஞ்சீபுரம் மாவட்டத்தில் 1137 கிராமங்களில் நேற்று உழவர் பெருவிழா தொடங்கியது. வாலாஜாபாத் ஒன்றியம், வாரணவாசியில் நடந்த உழவர் பெருவிழாவை கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட கலெக்டர் லி.சித்திரசேனன், எம்.எல்.ஏ.க்கள் வாலாஜாபாத் பா.கணேசன், வி.சோமசுந்தரம் உள்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இன்று தொடங்கிய இந்த உழவர் பெருவிழா அடுத்த மாதம்(மே மாதம்) 20–ந் தேதி வரை ஞாயிறு நீங்களாக அனைத்து நாட்களிலும் நடைபெறுகிறது.

## முள்ளண்டிரத்தில் நடந்த உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு ஊக்கப்பரிசு கலெக்டர் விஜய்பிங்ளே வழங்கினார்

ஆரணி அருகே நடந்த உழவர் பெருவிழாவில் கலெக் டர் விஜய்பிங்ளே விவசாயி களுக்கு ஊக் கப்பரிசு வழங்கினார்.

உழவர் பெருவிழா

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அடுத்த முள்ளண்டிரம் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் இரண்டாம் பசுமை புரட்சி யின் உழவர் பெருவிழா நடந் தது. கலெக்டர் விஜய்பிங்ளே தலைமை தாங்கினார். ஆரணி ஒன்றியக்குழு தலை வர் சாந்திசேகர், ஒன்றிய கவுன் சிலர் சரஸ்வதிபாலாஜி, ஊரா ட்சி மன்ற தலைவர் எஸ்.கும ரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வேளா ண் இணை இயக்குனர் சக்கர வர்த்தி வரவேற்று பேசினார்.

விழாவில் வேளாண் துறை சார்பாக அனைத்து துறை களிலும் உற்பத்தி செய்தமைக் கும், உற்பத்தியில் சாதனை படைத்த விவசாயிகளுக்கும், அதிகம் லாபம் பெற்ற விவ சாயிகளுக்கும் மீன், ஆடு, மாடு வளர்ப்புகளில் வளர்ச்சி அடைந்தவர்களுக்கு ஊக்க பரிசுகளை கலெக்டர் விஜய் பிங்ளே வழங்கி பேசினார். அவர் பேசியதாவது:

<u>அதிகாரிகள் விளக்கம்</u>

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் வேளாண் துறை சார்ந்த தோட்டகலை, வேளாண் பொறியியல், வேளாண் வணிக துறை, விதை சான்று , பட்டு வளர்ப்பு, கால் நடை பராமரிப்பு துறை உள்ளிட்ட 20 துறைகளில் அதி காரிகளை தங்கள் கிராமத் திற்கே வந்து விவசாய சம்மந் தமாகவிளக்கங்கள் அளிக்கின்றனர்.

இந்த பசுமை புரட்சி விவ சாயிகள் பெருவிழா சித்திரை 30ந்தேதி வரை நடைபெறும். அனைத்து விவசாய பெரு மக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த தொழி லுக்கு கடன் பெறுவது உயிர் உரங்கள் மான்ய விதைகள் கிடைப்பது குறித்து தொழில் நுட்ப கருத் தரங்குகளில் பங்கு பெற்று வாழ்வில் வளம்பெற வேண் டும். மேற்கண்டவாறு அவர்பேசி னார்.

<u>ஊக்கப்பரிசு</u>

கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ., ஜெமினி கே.ராமச் சந்திரன், உழவர் உழைப்பாளி கட்சி தலைவர் வேட்டவலம் மணிகண்டன், ஆரணி ஒன்றி யக்குழு முன்னாள் தலைவர் அ.கோவிந்தராசன், மாவட்ட துணை செயலாளர் டி.கருணா கரன், மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் சேவூர் ஜெ.சம்பத், தொகுதி செயலாளர் பையூர் ஏ.சந்தானம், வேளாண் துறை இணை இயக்குனர்கள் உள் பட விவசாயிகள் அனைத்து துறை உதவி அலுவலர்கள் கலந்து கொண்டனர். விவசாயம் சார்ந்த கண்காட்சிகள் இடம் பெற் றன. சாதனை படைத்த விவ சாயிகளுக்கு ரொக்க பரிசுக ளும், மான்ய விதைகள், உயர்உரங்கள் போன்றவைகள் வழங்கினர். முடிவில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் விஜயகுமார் நன்றி கூறினார்.

### தேவனாம்பட்டு ஊராட்சியில் 2 டிரான்ஸ்பார்மர் பழுதானதால் விவசாயிகள் பாதிப்பு

தேவனாம்பட்டு ஊராட் சியில் 2 மின்சார டிரான் ஸ்பார்மர் பழுதானதால் விவசாயிகள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

டிரான்ஸ்பார்மர் ரிப்பேர்

திருவண்ணாமலை மாவட் டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் தேவனாம்பட்டு ஊராட்சி யில் உள்ள காட்டுப்புத்தூர் கிராமத்தில் உள்ள 2 மின்சார டிரான்ஸ் பார்மர் கடந்த 20 நாட்களாக பழுகி உள்ளது. இந்த பகுதி விவசாயிகள் கிணற்று பாசனத்தை வைத்து கரும்பு, மணிலா, நெல், வாழை பயிரிட்டுள்ளனர். டிரான்ஸ் பார்மர் பழுதானதால் விவ சாய நிலங்களில் மின் மோட்டரை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பயிர்கள் கருகுகின்றன

இதனால் விவசாய பயிர்க ளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத தாலும், கடுமையான கோடை வெயில் அடிப்பதா லும் கரும்பு, வாழை, மணிலா, நெல் போன்ற விவசாய பயிர்கள் கருகி வருகிறது. மேலும் இந்தப்பகுதி பொது மக்களுக்கு குடிநீர் வினியோ கமும் பாதிக்கப்பட்டு கடந்த 20 நாடட்களாக குடிநீர் கிடைக்காமல் அவதிப்படு கின்றனர். இதுகுறித்து நார்த்தாம் பூண்டி மின்வாரிய அலுவ லகத்துக்கு தகவல் தெரிவித் தும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுமக்கள் நலன்கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம் கெங்கலேரி உழவர் பெருவிழாவில் 98 பயனாளிகளுக்கு ரூ.15 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் கலெக்டர் ராஜேஷ் வழங்கினார்

கிருஷ்ணகிரி அருகே கெங்கலேரி உழவர் பெருவிழாவில் 98 பய னாளிகளுக்கு ரூ.15 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் ராஜேஷ் வழங்கினார்.

உழவர் பெருவிழா

தமிழக முதல்அமைச்சர் உத்திரவு படி சித்திரை முதல் நாளான நேற்று அனைத்து மாவட்டங்களிலும் உழவர் பெருவிழா நடந்தது. இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கெங்கலேரி கிராமத்தில் நேற்று உழவர் பெருவிழா நடைபெற்றது. இவ்விழா வருகிற 20ந் தேதி வரை 30 நாட்களுக்கு அனைத்து வருவாய் கிராமங் களிலும் நடக்கிறது. இந்த விழாவில் கருத்துக்காட்சி, செயல் விளக்கங்கள், உழவர் கையேடு வினியோகம் குறித்து விளம்பர ஊர்தியினையும், விவசாயிகளுக்கு தெரிவிக்கும் வகையில் விளம்பரப்படுத்தப் பட்டு விழாவில் அறுசுவை உணவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம் கெங்கலேரி கிராமத்தில் நேற்று உழவர் பெருவிழா நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கினார். மாவட்ட வரு வாய் அலுவலர் பிரகாசம் ,மாவட்ட ஊராட்சித்தலைவர் அசோக்குமார் ஆகியோர் பேசினர்.

நலத்திட உதவிகள்

பின்னர் கலெக்டர் ராஜேஷ் விளம்பர ஊர்தியை கொடியசைத்து தொடங்கி வைத்து பேசினார். அப்போது ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் சுயஉதவி குழுக்களுக்கு சுழல் நிதி தலா ரூ.25 ஆயிரம் வீதம் 29 சுயஉதவி குழுக்களுக்கு ரூ.7 லட்சத்து 19 ஆயிரம் மதிப் பிலான காசோலையும், கடந் தாண்டு தமிழக முதல் அமைச்சரின் சிறப்பு திட்டத் தின் கீழ் கறவை பசுக்கள் பெற்று சிறப்பாக பராமரிப்பு செய்த பயனாளிகள் 10 நபர்களுக்கும், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளை பராமரித்தமைக்கு 15 நபர் களுக்கு சிறப்பு பரிசுகள், வேளாண்மைத் துறையின் சார்பாக சிறுதளைபைகள் 36 நபர்களுக்கும், தோட்டக் கலைத்துறை சார்பில் பசுமைக்குடில் அமைக்க 1 நபருக்கு ரூ. 6 லட்சத்து 50 ஆயிரம், விசைதெளிப்பான் 2 நபர்களுக்கு தலா ரூ.3ஆயிரத்து 400 வீதம் உள்பட மொத்தம் 96 பயனாளிகளுக்கு ரூ. 14 லட்சத்து 79 ஆயிரத்து 732 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்தநிகழ்ச்சியின் போது வேளாண்மை இணை இயக்கு நர்குணசேகரன், உதவி இயக் குநர் புகழேந்தி, உதவிக்கலெக் டர் மனோகரன், தாசில்தார் மகேஸ்வரன், கங்க லேரி ஊராட்சி மன்ற தலைவர் துரைராஜ், ஒன்றியக்குழு உறுப்பினர் கோவிந்தராஜ் உள்பட பலர் கலந்து கொண்ட னர்.

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி

குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு தேவை குறைந்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 4 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

### தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 15–க்கான ஏலம் கடந்த 11, 12 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 59 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 7 லட்சத்து 72 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 87 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

### விலை வீழ்ச்சி

இந்த ஏலத்தில் 72 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. தேயிலை தூளுக்கு தேவை குறைந்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 4 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 285 ரூபாயாக இருந்தது. ஆர் தோடக்ஸ் தேயிலை தூள் 291 ரூபாய் என்று உயர்ந்தபட்ச விலையாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 85 ரூபாயில் இருந்து 88 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 115 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 90 ரூபாயில் இருந்து 92 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 130 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 16–க்கான ஏலம் வருகிற 18, 19 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 45 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## திருப்பூரில் உழவர் பெருவிழா: ரூ.6¼ லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் அமைச்சர்கள் வழங்கினார்கள்

திருப்பூரில் நடந்த உழவர் பெருவிழாவில் ரூ.6¼ லட்சத்தில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினார்கள்.

உழவர் பெருவிழா

திருப்பூர் மாவட்ட வேளாண்மை துறை சார்பில் மாவட்ட அளவிலான உழவர் பெருவிழா திருப்பூர் பல்லடம் ரோட்டில் உள்ள லட்சுமி கல்யாண மண்டபத்தில் நேற்று காலை நடந்தது. விழா வுக்கு மாவட்ட கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட வேளாண்மை இணை இயக் குனர் முகமது கலிமுல்லா ஷெரீப் வரவேற்று பேசி னார்.

மேயர் விசாலாட்சி, தமிழ் நாடு அரசு கேபிள் டி.வி. கழக தலைவர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித் தனர். வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன், கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி ஆகியோர் உழவர் பெருவிழா குறித்து பேசி னார்கள்.

மாவட்ட ஊராட்சி தலை வர் சண்முகம், எம்.எல்.ஏ.க் கள் கருப்பசாமி, என்.எஸ்.என்.நடராஜன், துணை மேயர் குணசேகரன், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் ஆனந்த குமார், திருப்பூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சாமிநாதன், மண்டல தலை வர்கள் ராதாகிருஷ்ணன், கிருத்திகா ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

நலத்திட்ட உதவிகள்

விழாவில் பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.ராம லிங்கம் உழவர் பெருவிழா ரதத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் வேளாண் தொழில் நுட்ப கண்காட்சியை ரிப்பன் வெட்டி தொடங்கி வைத் தார்.

உழவர் பெருவிழாவை தமி ழக வேளாண்மைத்துறை அமைச்சர் செ.தாமோதரன் தொடங்கி வைத்து ரூ.6 லட்சத்து 26 ஆயிரம் மதிப்பில் 81 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை

வழங்கினார். பின்னர் தமிழ்நாடு வேளாண் மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா தொழில் நுட்ப கையேட்டை வெளியிட்டு அமைச்சர் தாமோதரன் பேசி னார். அப்போது அவர் கூறிய தாவது:

தென்னை ஆராய்ச்சி நிலையம்

கால நிலைக்கு ஏற்ப நீங்கள் விவசாயம் செய்ய வேண்டும். இதற்கான ஆலோசனைகளை அருகில் உள்ள வேளாண்மை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தமிழக அரசு விவசாய திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக் கிறது. கடுமையான வறட்சி நிலவு வதால் தமிழகத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக முதல் அமைச்சர் அறிவித்தார். அத் துடன் அமைச்சர்கள் அடங் கிய தனி குழு ஒன்றையும் அனைத்து மாவட்டங்களுக் கும் அனுப்பி வறட்சி குறித்து கணக்கெடுக்கப்பட்டு வருகி றது. திருப்பூர் மாவட்டம் ஜல்லிபட்டியில் தேசிய தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட உள்ளது.

சொட்டுநீர் பாசனம்

சிறுதானியங்கள் உற்பத் தியை விவசாயிகள் பெருக்க வேண்டும். சிறுதானிய உற்பத் தியை பெருக்க திருவண்ணா மலை மாவட்டத்தில் தனி ஆராய்ச்சி நிலையம் அமைக் கப்பட உள்ளது. சொட்டு நீர் பாசனத்துக்காக ரூ.520 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள் ளது.

தமிழ்நாட்டில் நிலவும் தண் ணீர் பிரச்சினையை கருத்தில் கொண்டு விவசாயிகள் அனை வரும் சொட்டு நீர் பாசன முறையை பின்பற்ற வேண்டும். பயிர்காப்பீட்டு திட்டத்துக் காக ரூ.46 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. விவசாயிகள் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன் அடைய வேண்டும். இவ்வாறு அமைச்சர் தாமோதரன் பேசினார்.

விழாவில் ஏராளமான விவ சாயிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். வேளாண் கண்காட்சியில் தோட்டக்கலைத்துறை சார் பில் அமைக்கப்பட்டு இருந்த காய்கனிகளால் செய்யப்பட்ட மயில் மற்றும் பறவைகள், தர்பூசணியில் செய்யப்பட்ட பூக்கள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. முடிவில் வேளாண்மை துணை இயக்குனர் சந்தான கிருஷ்ணன் நன்றி கூறினார்.

விதைப்பண்ணை

பின்னர் பொங்கலூர் அருகே தேவணம்பாளையத் தில் உள்ள அரசு விதைப் பண்ணையை அமைச்சர்கள் செ.தாமோதரன், கே.வி.ராம லிங்கம், எம்.எஸ்.எம்.ஆனந் தன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் மற்றும் அதி காரிகள் உடன் சென்றனர்.

## தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் அனைத்து பூக்களின் விலையும் இரு மடங்கு உயர்ந்தது

### விற்பனை குறைவால் வியாபாரிகள் கவலை

தமிழ் புத்தாண்டை யொட்டி திருப்பூரில் அனைத்து பூக்களின் விலையும் இரு மடங்கு உயர்ந்து விட்டது. விலை உயர்வு காரணமாக விற் பனை குறைந்ததால் வியாபாரிகள் கவலை அடைந்தனர்.

தமிழ் புத்தாண்டு

தமிழர் திருநாளாம் தமிழ் புத்தாண்டு நாடு முழுவதும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) சிறப்பாக கொண்டாடப்படு கிறது. பழவகைகள், பூ, பணம் ஆகியவற்றை வைத்து அதி காலையில் பூஜை செய்து, அப்போது ஏற்றப்படும் குத்து விளக்கின் தீப ஒளியில் குழந்தைகள் முதல் பெரிய வர்கள் வரை அனைவரையும் கண் விழிக்க செய்வது தான் இந்த நாளின் சிறப்பாகும்.

பின்னர் அந்த பழவகை களை குடும்பத்தார் அனை வரும் பகிர்ந்து உண்பார்கள். குடும்ப தலைவர் குடும்பத் தார் அனைவருக்கும் தங்கள் வசதிப்படி ரூ.50, ரூ.100 என்று பணம் வழங்குவார்கள். இதை கை நீட்டம் என்று சொல் வார்கள். அதை மகிழ்ச்சியுடன் பெற்று, சந்தோஷமான ஆண் டாக இந்த ஆண்டு இருக்க வேண்டும் என்று அனைவரும் குடும்ப பெரியவர்களிடம் ஆசி பெறுவார்கள்.

பூக்கள் விலை உயர்வு

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் புத்தாண்டையொட்டி, திருப்பூர் மார்க்கெட்டில் பழங் கள், பூ வகைகள் விற்பனைக்கு குவிந்து இருந்தது. பூக்களின் விலையும், இரு மடங்கு உயர்ந்து இருந்தது. திருப்பூர் பூ மார்க்கெட்டில் நேற்று முன்தினம் ரூ.200க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ மல் லிகை பூ, முல்லை பூ, நேற்று ரூ.400க்கும், ரூ.320க்கு விற்கப் பட்ட கனகாம்பரம் ரூ.480 க்கும், ரூ.150க்கு விற்கப்பட்ட சம்பங்கி ரூ.350க்கும், ரூ.60க்கு விற்கப்பட்ட பட்டுப்பூ ரூ.150க் கும், ரூ.150க்கு விற்கப்பட்ட அரளி பூ ரூ.300க்கும், ரூ.120க்கு விற்கப்பட்ட செவ்வந்தி பூ ரூ.240க்கும் விற்கப்பட்டது.

பழங்கள்

அதேபோல் ஆப்பிள், ஆரஞ்சு, மாம்பழம், கொய்யா, அன்னாசி பலா, போன்ற அனைத்து பழவகைகளும் கிலோவுக்கு ரூ.50 வரை உயர்ந்து இருந்தது. நேற்று முன்தினம் ரூ.4க்கு விற்பனை செய்யப்பட்ட பூவன் பழம் ஒன்றின் விலை நேற்று ரூ.5 ஆக இருந்தது. அதேபோல ரூ.2.50க்கு விற்கப்பட்ட ஒரு எலுமிச்சம் பழத்தின் விலை ரூ.3 ஆக உயர்ந்து விட்டது. மொத்தத்தில் பூஜைக்கு தேவையான அனைத்து பொருட்களின் விலையும் மிக வும் உயர்ந்து இருந்ததால் விற்பனை குறைவாகவே இருந்ததாக வியாபாரிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

## தேமங்கலம் கிராமத்தில் உழவர் பெருவிழாவில் நலத்திட்ட உதவிகள் மாவட்ட கலெக்டர் முனுசாமி வழங்கினார்

நாகை அருகே தேமங்கலம் கிராமத்தில் உழவர் பெருவிழாவில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் முனுசாமி வழங்கினார்.

உழவர் பெருவிழா

நாகையை அடுத்த தேமங்கலம் ஊராட்சியில் உழவர் பெருவிழா நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் முனுசாமி கலந்து கொண்டு விழாவை தொடங்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

இந்த ஆண்டு மழை குறைவாக பெய்தது. மேட்டூர் அணையில் தண்ணீர் போதிய அளவு இல்லை. இந்த காரணங்களால் நாகை மாவட்ட விவசாயிகள் உள்பட டெல்டா மாவட்ட விவசாயிகள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாயினர். அரசு சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியது. இதில் நேரடி விதைப்பு, சமுதாய நாற்றங்கால் போன்ற முறைகள் செயல்படுத்தப்பட்டன. அமைச்சர்கள் அடங்கிய உயர்மட்டக்குழு நாகை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை பார்வையிட்டு இழப்பை மதிப்பீடு செய்தது. ரூ. 272 கோடி நிவாரணம் நாகை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

<u>மண்மாதிரிகள்</u>

டீசல் மானியமாக ரூ. 2 கோடியே 11 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 2 கோடியே 75 லட்சம் கேட்கப்பட்டுள்ளது. அதை பெற்று உடனடியாக விவசாயிகளுக்கு வழங்கப்படும். அதிக அளவு விலையில்லா மாடுகள் வினியோகம் நடந்ததன் பலனாக நாகை மாவட்டத்தின் பால் உற்பத்தி பல மடங்கு அதிகரித்துள்ளது. உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்களில் மண்மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனை செய்து தேவையான உரங்கள் இடுவதற்கு அறிவுரைகள் வழங்கப்படும். எலி ஒழிப்பு முகாம் நடைபெறும். வேளாண்மை துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிக திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நாகை மாவட்டத்தில் விளைநிலங்கள் கடல் நீரால் பாதிப்பிற்கு உள்ளாகாமல் தடுக்க ரூ. 1200 கோடியில் தொலைநோக்கு திட்டத்தை முதல்அமைச்சர் அறிவித்துள்ளார். அதற்கான ஆய்வுப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 5 ஆயிரத்து 500 பண்ணை குட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டது. 200 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

100 நாள் வேலை திட்டத்தில் தொழிலாளிகளுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் ரூ. 1½ லட்சம் மதிப்பில் அரசே பண்ணை குட்டைகளை அமைத்து கொடுக்கிறது. அதில் மீன் வளர்க்க ரூ. 17 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதுபோன்ற நல்ல திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

<u>நலத்திட்ட உதவிகள்</u>

விழாவில் விலையில்லா கறவைப்பசுக்கள், விலையில்லா வெள்ளாடுகளை சிறந்த முறையில் பராமரித்த 18 பேருக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களையும், வேளாண்மை துறை சார்பில் ரூ. 2 லட்சத்து 93 ஆயிரம் மதிப்பில் 4 குழுக்களுக்கு நடவு எந்திரம், பவர் டில்லர் போன்ற விவசாய

கருவிகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை கலெக்டர் முனுசாமி வழங்கினார். வேளாண்மை துறை இணை இயக்குனர் உ.ராஜேந்திரன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் பிரிதிவிராஜ், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் தசரதராமன், சிக்கல் அறிவியல் ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜேந்திரன், வேளாண்மை விற்பனைத்துறை துணை இயக்குனர் சுந்தர், ஒன்றியக்குழு உறுப்பினர் தங்க.கதிரவன், ஊராட்சிமன்ற தலைவர் சுமதிசுகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தானியங்களை பாதுகாக்க புதிய ஷெட் கட்டப்படும் வாரிய தலைவர் ரகு பேட்டி

புதுச்சேரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளின் தானியங்களை பாதுகாக்க புதிய 'ஷெட்' கட்டப்படும் என்று தலைவர் ரகு கூறினார்.

குறைகளை கேட்டறிந்தார்

புதுச்சேரி ஒழுங்கு முறை விற்பனை கூட தலைவர் ரகு நேற்று காலை தட்டாஞ்சாவடியில் உள்ள ஒழுங்கு முறை விற்பனை கூடத்தை அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார். அப்போது அங்கு விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். பின்னர் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.தொடர்ந்து ஒழுங்கு முறை விற்பனை கூட தலைவர் ரகு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

வளர்ச்சி பாதையில்...

புதுச்சேரி முதல்–அமைச்சர் ரங்கசாமி என்னை ஒழுங்கு முறை விற்பனைக்கூட தலைவராக நியமித்து, நல்ல முறையில் விவசாயிகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் துறையின் அமைச்சர் சந்திரகாசு என்னை அழைத்து விவசாயிகளுக்காகவும், விற்பனைக்குழு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்காகவும் செயல்பட வேண்டும் என்று கூறினார். முதல்–அமைச்சரும், அமைச்சரும் விற்பனைக்குழுவை நல்ல வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளனர். அதன்படி நானும், துறையின் செயலர் மற்றும் அதிகாரிகளும் செயல்பட்டு வருகிறோம்.

முன்பு சிறு,சிறு வாகனங்களில் இங்கு விவசாயிகள் கொண்டுவந்து விற்பனை செய்யும் நெல் உள்ளிட்ட தானியங்களை வியாபாரிகள் எடுத்து செல்வர். ஆனால் தற்போது பெரிய வாகனங்களில் எடுத்து செல்கின்றனர். இதனால் ஒரு வியாபாரி தனக்கு 400, 500 மூட்டை சேரும் வரை விவசாயிகளிடம் வாங்கிய நெல்லை இங்கேயே வைக்கின்றார். இதனால் நெல் மூட்டைகளின் குவியல் இங்கு இருக்கிறது. மற்ற வேறு எந்த காரணத்தினாலும் இங்கு நெல் உள்ளிட்ட தானிய மூட்டைகள் வைப்பதில்லை.

புதிய ‘ஷெட்‘

நான் தலைவராக பொறுப்பேற்பதற்கு முன்பு விவசாயிகளின் பொருட்களுக்குரிய பணம் கிடைக்க 2 வார காலத்திற்கு மேல் ஆகும். ஆனால் தற்போது 3 நாட்கள் முதல் முதல் ஒரு வார காலத்திற்குள் விவசாயிகளுக்குரிய பணம் கொடுக்கப்பட்டுவிடுகிறது. அதுபோல் முன்பு நாள் ஒன்றுக்கு 500 மூட்டை நெல் மட்டுமே விவசாயிகள் எடுத்து வந்தனர். ஆனால் தற்போது 2 ஆயிரத்து 500 மூட்டை வரை வருகிறது.

மூட்டைகளே வராமல் இருந்த திருக்கனூர் ஒழுங்கு முறை விற்பனை நிலையத்திற்கு தற்போது நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் மூட்டைகள் வருகிறது. இதன் மூலம் ஒழுங்கு முறை விற்பனை நிலையத்திற்கு செஸ் வரி 40 சதவீதம் உயர்ந்துள்ளது. அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதல் விலை தற்போது விவசாயிகளுக்கு இங்கு கிடைக்கிறது. விவசாயிகள் கொண்டுவரும் நெல் உள்ளிட்ட தானியங்களை பாதுகாக்க புதியதாக ‘ஷெட்‘ கட்டித்தருவதாக முதல்–அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

நடவடிக்கை எடுக்கப்படும்

இது ஒரு சேவை மையம் என்பதால் லாப நோக்கோடு செயல்படவில்லை. இங்கு பணிபுரியும் ஊழியர்களில் பெரும்பாலானோர் குறிப்பிட்ட நேரத்திற்கு வருவது இல்லை. எனவே அவர்களிடம் குறிப்பிட்ட நேரத்திற்கு அலுவலகத்திற்கு வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் வருகையை பதிவு செய்ய கைரேகை பதிவு மெஷினை அமைக்க உள்ளோம். சரியாக பணியாற்றாத ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.மேற்கண்டவாறு ரகு கூறினார்.

**திண்டிவனத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள நீடித்த கரும்பு சாகுபடி முறையை ஆப்கானிஸ்தானில் கடைபிடிப்போம் வெளிநாட்டு வேளாண்மை விஞ்ஞான குழுவினர் தகவல்**

திண்டிவனத்தில் செயல் படுத்தப்பட்டுள்ள நீடித்த கரும்பு சாகு படி முறையை ஆப் கானிஸ்தானில் கடைபிடிப்போம் என அதனை பார்வையிட்ட பின் வெளிநாட்டு வேளாண்மை விஞ்ஞான குழுவினர் தெரி வித்தனர்.

குறைந்த செலவு

திண்டிவனம் எண்ணை வித்துக்குள் ஆராச்சி நிலையம் உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள நிலவள திட்டத்தினை ஓங்கூர் வராகநதி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இதன் மூலம் விவசாயிகள் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவது குறித்து செயல்முறை காட்டி வருகின்றனர். அதாவது சாதாரண நிலத்தில் ஏக்கருக்கு 30 மூட்டை நெல் கிடைத்தால், திருந்திய நெல் சாகுபடி மூலம் பயிர் செய்தால் ஏக்கருககு 37 மூட்டைகள் மகசூல் கிடைக் கின்றன. மேலும் இதற்காக தண்ணீர் பயன்படுத்தப்படும் தண்ணீர் செலவு மற்றும் கூலியாட்கள் செலவு மிக, மிக குறைவு.

அதிக மகசூல்

இதேபோன்று கரும்பில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தை இயக்கியுள்ளனர். சாதாரணமாக ஒரு ஏக்கர் கரும்பு பயிரிட 4 டன் கரும்பு விதைகரனை தேவைப்படும். ஆனால் நீடித்த நவீன கரும்பு சாகுபடி செய்ய வெறும் அரை டன் கரும்பு விதைகரனை போதுமானதாகும். சொட்டு நீர் பாசன முறையில் தண்ணீர் பாய்ச்சுவதால் இதற்கு போதிய உரம் மற்றும் தண்ணீர் நேரடியாக கிடைக்கின்றன. இவை திண்டிவனம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள் ளனர்.

12 பேர் கொண்ட குழு

இதனை பார்வை யிடுவதற்காக ஆப்கானிஸ் தான் நாட்டை சேர்ந்த வேளான் விஞ்ஞானி முகமது இப்ராகீம் தலைமையிலான 12 பேர் கொண்ட குழுவினர் நேற்று திண்டிவனத்திற்கு வந்த னர். அவர்களை திண்டி வனம் எண்ணை வித்துக்கள் ஆராச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தை சேர்ந்தவர்கள் வரவேற்றனர். பின்னர் திண்டி வனம் அருகே காட்ராம் பாக்கத்தில் திருந்திய நெல்சாகுபடியையும், கீழ்கூத் தாப்பாக்கத்தில் நீடித்த கரும்பு சாகுபடியையும், ஆலங்குப் பத்தில் சொட்டுநீர் பாசனத் தின் மூலம் சாகுபடி செய் துள்ள கிரிணி மற்றும் தர்பூசணி சாகுபடியையும் பார்வையிட்டனர். அவர் களுக்கு எண்ணை வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் வைத்தியநாதன், அறிவியல் வேளாண்மை நிலைய தலைவர் சாத்தையா ஆகியோர் செயல்முறை விளக்கமளித்தனர்.

முறையாக கற்றுள்ளோம்

பின்னர் வேளாண் விஞ்ஞான குழுவினர் நிருபர்களி டம் கூறுகையில், தமிழகத்தில் திருந்திய நெல்சாகுபடி, நீடித்த கரும்பு சாகுபடி முறையில் சிறப்பாக விவசாயம் செய்யப் பட்டு வருகிறது. இதன் மூலம் குறைந்த செலவில் அதிக லாபத்தை விவசாயிகள் பெற்று வருகின்றனர்.

இது போன்ற தொழில்நுட்பங்கள் எங்களது நாட்டில் இல்லை. எனவே இந்த சாகுபடி முறையை நாங்கள் முறையாக கற்றுக்கொண்டுள்ளோம். இதேபோன்ற தொழில் நுட்பங் களை எங்களது நாட்டிலும் பயன்படுத்துவோம் என்றனர். அப்போது அவர் களுடன் திண்டிவனம் வேளாண்மை திட்ட விஞ்ஞானிகள் அன்பு மணி, பிரபு, ராதாகிருஷ்ணன் உள்பட பலர் உடனிருந் தனர்.

## தமிழ்புத்தாண்டு மற்றும் முகூர்த்த நாட்கள் காரணமாக அரியலூரில் காய்கறி விலை கிடு–கிடு உயர்வு

அரியலூர் நகரை சுற்றியுள்ள ராமலிங்காபுரம், ரசுலாபுரம், உசேன் நகரம், சில்லக்குடி, மேத்தால், பார்ப்பனசேரி, மரவனூர், வாரணவாசி, கவுண்டர் பண்ணை, மற்றும் பல்வேறு கிராமங்களில் வீட் டிற்கு நாம் அன்றாடம் சமையலுக்கு பயன்படுத்தும், கீரை வகைகள், கத்தரிக்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, அவரைக்காய், வாழைக் காய்,முருங்கைகாய், தக்காளி, வெங்காயம்

போன்ற காய்கறி களை நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிர் செய்து அதனை விற்பதற்காக அரியலூரில் உள்ள காந்தி மார்க்கெட்டிற்கு தினசரி கொண்டு வரு வார் கள்.

இதை தவிர மலை பிர தேசங்களில் விளையும் கேரட், பீன்ஸ், பீட்ருட், காலிபிளவர், உருளைக்கிழங்கு, முட்டை கோஸ், போன்ற காய்கள் திருச்சியில் இருந்து அரியலூ ருக்கு தினசரி லாரி கள் மூலம் விற்பனைக்கு வரும்.

அரியலூர் மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கடந்த 10 தினங்களுக்கு முன் மந்தமாக இருந்தது. ஒரு கிலோ தக்காளி ரூ.10க்கும் ஒரு கிலோ அவரைக் காய் ரூ.30க்கும், வெங்காயம் ரூ.25 க்கும், மற்ற காய்கறிகளும் ஓரளவு விலை குறைந்தும் விற்கப்பட்டு வந்தன.

சித்திரை மாதம் தமிழ் வருட பிறப்பு வருவதாலும், திருமண தேதிகள் நெருங்குவதாலும், தற்பொழுது காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது.

50 ரூபாய்க்கு விற்ற பீன்ஸ் 120 ரூபாய்க்கும், 25 ரூபாய்க்கு விற்ற வெங்காயம் 50 ரூபாய்க் கும், 10 ரூபாய்க்கு விற்ற தக்காளி 30 ரூபாய்க்கும், 30 ரூபாய்க்கு விற்ற அவரைக்காய் 60 ரூபாய்க்கும் விலை உயர்ந் துள்ளது.

இதேபோன்று இதர காய் கறிகள், கீரைகள் போன்றவை களும் விலை உயர்ந்து வருகின் றன. இத னால் இந்த பகுதிக ளில் உள்ள விவசாயிகள் ஓரளவு மகிழ்ச்சி அடைந்துள்ள னர். ஆனால் அன்றாடம் காய்கறிகள் வாங்கும் நபர்க ளுக்கு விலை வாசி உயர்வு கடும் சுமையாக உள்ளது.

மேலும் அரசு விடுமுறையும், பண்டிகைகாலங்களும் உள்ள தால் மார்க்கெட்டில் காய் கறிகள் வாங்க கூட்டம் அலை மோதியது. காய்கறி களை கொண்டு வரும் விவசாயிகளின் கூட்டமும், காய்கறிகளை வாங்கும் வாடிக்கையாளர் களின் கூட்டமும் அதிக அளவில் இருந்தது.

## அரியலூர் மாவட்டத்தில் உழவர் பெருவிழா

அரியலூர் மாவட் டத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் உழவர் பெருவிழா கொண்டாடப்பட உள்ளது.

உழவர் பெருவிழா

தமிழக அரசு அறிவித்தபடி சித்திரை முதல் நாள் தமிழ் புத்தாண்டு அன்று (14.04.2013) உழவர் பெருவிழா அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டாரம், பளிங்காநத்தம் கிராமத்தில் மாவட்ட கலெக்டர் தலைமையில் துவங் கப்பட உள்ளது.

வேளாண்மையில் உற்பத்தி யை இருமடங்காக்கி வருமானத்தை மும் மடங்காக்க தமிழக அரசு இரண்டாம் பசுமை புரட்சியை நோக்கி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

195 வருவாய் கிராமங்களிலும்

இதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டத்தில் 195 வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழா ஏப்ரல் 14ந் தேதி தொடங்கி மே மாதம் 20ந் தேதி வரை நடை பெறவுள்ளது. உழவர் பெரு விழா ஆறு வட்டாரங்களிலும் தினம் ஒரு வருவாய் கிராமத் தில் நடைபெற உள்ளது.

உழவர் பெருவிழாவில் வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை துறை, விதைச்சான்று துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடைத்துறை, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, பட்டு வளர்ப்புத்துறை, மீன் வளர்ப்பு துறை, பால் வளத்துறை, ஆவின், கூட்டுறவு துறை, மாவட்ட முன்னோடி வங்கி, நபார்டு வங்கி, வருவாய் துறை, நல்வாழ்வு துறை, புது வாழ்வு திட்டத்துறை, மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு வேளாண்மை பலகலைக் கழக விஞ்ஞானிகள், வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் வனத்துறை போன்ற அனைத்து துறைகளும் கலந்து கொண்டு, துறை சார்ந்த தொழில் நுட்பங்கள், திட்டங் கள், மானிய விபரம் மற்றும் பயனாளிகளுக்கு இடு பொருள்கள் வழங்கப்பட உள்ளது. உழவர் பெருவிழா நடைபெறும் அனைத்து வருவாய் கிராமத்திலும் துறைச் சார்ந்த கருத்து கண் காட்சி விவசாயிகள் பயன் பெறும் வகையில் அமைக்கப் பட உள்ளது. உழவர் பெரு விழாவின் போது மண்மாதிரி சேகரித்தல், கால்நடை சிறப்பு மருத்துவ முகாம், சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

**வேண்டுகோள்**

விழாவில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு மதியம் அறுஞ்சுவை உணவு வழங்கப் படும். எனவே அனைத்து விவசாயிகளும் தங்கள் வருவாய் கிராமத்தில் நடை பெற உள்ள உழவர் பெரு விழாவில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட கலெக்டர் கேட்டு கொள்கிறார்.

மேலும், விவரங்களுக்கு அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்கு நரை தொடர்பு கொண்டு பயன் பெறமாறு மாவட்ட கலெக்டர் ரவிகுமார் தெரி வித்துள்ளார்.

## உணவுப் பொருட்கள் உற்பத்தியை பெருக்கும் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் உழவர் பெருவிழாவில் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேச்சு

வேளாண் உற்பத்தியை பெருக்கும் தொழில் நுட்பம் குறித்து விவசாயி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று உழவர் பெரு விழாவில் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

உழவர் பெருவிழா

தேனி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை சார்பில் வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடத்தப் படுகிறது. இதன் தொடக்க விழா போடி ஊராட்சி ஒன்றியம் ராசிங்காபுரத்தில் நேற்று நடந்தது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி தலைமை தாங்கினார். வேளாண்மை

இணை இயக்குனர் சுந்தரம் வரவேற்றார். விழாவில் தமிழக நிதிஅமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் கலந்துகொண்டு உழவர் பெருவிழா கண் காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இந்த கண்காட்சியில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனைத்துறை, கால்நடை பாதுகாப்புத்துறை, கூட்டுறவுத்துறை உள்பட பல்வேறு துறைகளின் சார்பில் காய்கறிகள், பழங்கள், வேளாண் உபகரணங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு இருந்தன. மேலும் பயிர் சாகுபடியை மேம்படுத்துவது தொடர்பான செயல்விளக்கம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை சார்பில் தானியங்களில் ஈரப்பதம் அறியும் செயல் விளக்கம் போன்றவை அளிக் கப்பட்டது.

<u>தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் தவிப்பு</u>

அதன்பிறகு நடந்த விழாவில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண் பொறியியல் துறை ஆகியவை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை நிதிஅமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

இதற்கு முன்பு தமிழகத்தை ஆட்சி செய்த முதல்–அமைச் சர்களுக்கு முதன்மை முதல்– அமைச்சராக ஜெயலலிதா திகழ்கிறார். மக்களின் வரி வருவாயை மக்களிடம் கொண்டு செல்லும் போது அந்த திட்டம் தொலை நோக்கு திட்டமாக இருக்க வேண்டும் என்று அனைத்து திட்டங்களையும் தீட்டி செயல்படுத்துவதோடு, திட்டங்கள் மக்களுக்கு சென்றடைகிறதா? என்று தொடர்ந்து கண்காணித்து வருகிறார். கடந்த 2 ஆண்டு காலத்தில் 51 கல்லூரிகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா திறந்து சாதனை படைத்து உள்ளார்.

தமிழகத்தில் 65 சதவீத மக்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலாளி யாக உள்ளனர்.கடந்த தி.மு.க. ஆட்சியில் தரமான உரம், விதைகள் கிடைக்காமல் விவசாயிகள் தவித்து வந்த னர். ஆனால் விவசாயி களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேளாண்மை துறைக்கு மட்டும் இந்த ஆண்டு ரூ.5 ஆயிரத்து 304 கோடியை முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஒதுக்கி உள்ளார். வேளாண் உற்பத்தியை 2 மடங்காக உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப் படுகிறது. உற்பத்தி 2 மடங்காக உயரும் போது விவசாயிகளுக்கு வருவாய் 3 மடங்காக உயரும் என்ற லட்சியத்தில் உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது.

<u>விழிப்புணர்வு</u>

விவசாயிகள் சிலருக்கு புதிய தொழில்நுட்பம் குறித்து தெரியாமல் உள்ளது. எனவே உழவர் பெருவிழா மூலமாக விவசாயிகளிடம் உற்பத்தியை பெருக்கும் தொழில்நுட்பம் குறித்து விழிப்புணர்வு ஏற் படுத்த வேண்டும். உழவர் பெருவிழாவில் கண்காட்சி, செயல் விளக்கம் அளிக்கப்படு கிறது. இதனை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கி தங் களின் எதிர்கால வாழ்க்கையை பிரகாசமாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு நிதிஅமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசி னார்.

விழாவில் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் சிவக்குமார், மாவட்ட கலெக் டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) முத்தையா, உத்தமபாளையம் ஆர்.டி.ஓ. கண்ணன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் முருகன், மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குனர் ரெங்க நாதன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் மகாலிங்கம், போடி நகரசபை தலைவர் பழனிராஜ், போடி ஒன்றியக் குழு தலைவர் சித்ராதேவி சுந்தர்ராஜன், துணைத் தலைவர் வணிதாமணி, ராசிங்காபுரம் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகநாதன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் போடி வேளாண்மை உதவி இயக்குனர் சுருளிமுத்து நன்றி கூறினார்.

## உழவர் பெருவிழாவையொட்டி வேளாண்மை விழிப்புணர்வூட்டும் ரதம் கலெக்டர் நாகராஜன் தொடங்கி வைத்தார்

உழவர் பெருவிழாவையொட்டி, வேளாண்மை விழிப்புணர்வூட்டும் ரதத்தை கலெக்டர் நாகராஜன் நேற்று தொடங்கி வைத்தார்.

<u>உழவர் பெருவிழா</u>

வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழா நடத்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு இருந்தார். இதன்அடிப்படையில் உழவர் பெருவிழா நேற்று தொடங்கியது. வருகிற 17–ந் தேதி வரை விழா நடக்கிறது. இதையொட்டி, பாரம்பரிய பொருள் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது. வேளாண் விழிப்புணர்வூட்டும் ரதமும் இயக்கப்படுகிறது.குமரி மாவட்டத்தில் வேளாண்மை விழிப்புணர்வூட்டும் ரதத்தை கலெக்டர் நாகராஜன் நேற்று காலை கலெக்டர் அலுவலக வளாகத்தில் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறுகையில், ‘‘இந்த ரதம், அனைத்து கிராமங்களுக்கும் சென்று விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கும். அப்போது செயல்விளக்கங்கள் காண்பிக்கப்படும். உழவர் பெருவிழாவில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு மதியம் அறுசுவை உணவு வழங்கப்படும். வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படும். விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். தமிழகத்தின் பாரம்பரிய பொருட்களான இளநீர், சீயக்காய் மற்றும் பருத்தி பொருட்களின் பயன், முக்கியத்துவம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அரசால் சிறப்பு திட்டம் அறிவிக்கப்பட்டு உள்ளது. இது தொடர்பாக மாவட்ட அளவில் கருத்தரங்கு நடைபெறுகிறது’’ என்றார்.

<u>பரிசு வழங்கினார்</u>

நிகழ்ச்சியில் விலையில்லா ஆடுகளை சிறந்த முறையில் பராமரித்தவர்களுக்கும், கால்நடை டாக்டர்களுக்கும் கலெக்டர் பரிசு வழங்கினார். மேலும் கரகாட்ட பெண் கலைஞர் ஒருவருக்கு கலைபண்பாட்டு துறை சார்பில் ரூ.5 ஆயிரம் மதிப்பில் பட்டுப்புடவை, கரகம் மற்றும் சலங்கை ஆகியவற்றை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் நாஞ்சில் முருகேசன் எம்.எல்.ஏ., வேளாண்மை

இணை இயக்குனர் சையது அகமது மீரான்ஜி, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் முகமது ஷாபி, வேளாண் பொறியியல் செயற்பொறியாளர் ஆனந்தராஜா, முன்னோடி வங்கி மேலாளர் கஜேந்திரநாதன், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் எம்.ஜான்சிலின் விஜிலா, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) போஸ்லின் வின்சென்ட்சாம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

<u>தேரூரில் விழா</u>

இதைப்போல அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் தேரூரில் உழவர் விழா நடந்தது. விழாவை தேரூர் பேரூராட்சி தலைவர் வீரபத்திரபிள்ளை தொடங்கி வைத்தார். விழாவில் வேளாண்மை உற்பத்தியை 2 மடங்கு பெருக்குவது, விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்கு பெருக்குவது, வேளாண் சார்புத்துறைகள் பற்றி எடுத்துரைத்தல், மண்மாதிரி எடுத்தல், எலி ஒழிப்பு, திருந்திய நெல் சாகுபடி, போன்றவை பற்றி செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. நெல்விதைகளும், உயர்ரக பழக்கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. விவசாயி சண்முகம்பிள்ளை விதைப்பண்ணை அனுபவம் பற்றி பேசினார்.நிகழ்ச்சியில், வேளாண்மை உதவி இயக்குனர் முருகேசன், மோகன், பேராசிரியர் மணிவண்ணன், தோட்டக்கலைத்துறை அதிகாரி செல்வதாஸ், உதவி பொறியாளர் பாலகிருஷ்ணன், அதிகாரிகள் பாலமுருகன், வனஜா, கிருபாராணி, பசுங்கொடி, பிரவீனா உள்பட பலர் கலந்து கொண்டனர்.